உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 35 | இராக்ஷச – பங்குனி – 10—4—76 | இதழ் 5

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

ஞானத்தின் திருவுரு

புருஷார்த்தங்கள் நான்கு :

மக்கட் பிறப்பை அடைந்தோர் அதனைக்கொண்டு அடையத் தக்க பயன், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குமாம். இதுபற்றியே இவற்றை, புருஷார்த்தம் என்பர்.

அறம் முதலிய நான்குமே பயனாயினும், அவற்றுள் வீடு பேறே சிறந்த பயனாகும். ஏனெனில், அஃது ஒன்றே, பெற்ற பின்னர் ஒரு ஞான்றும் இழக்கப்படாதது. என்றும் நிலைத்து நிற்பது, ஆகையால் 'பரமபுருஷார்த்தம்' எனப்படுகின்றது. தமிழில் தொல்லாசிரியர்களாகிய தொல்காப்பியரும், திருவள்ளுவரும் இதனை, 'சிறப்பு' என்னும் பெயரால் குறிப்பர்.

"காஞ்சி தானே பெருந்திணைப் புறனே",

"பாங்கருஞ் சிறப்பின் பல்லாற்றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே".

என்பன தொல்காப்பியம். பாங்கருஞ் சிறப்பு - இணையின்ஞகச் சிறந்து நிற்கும் பயன்; வீடு பேறு, ' அது நிமித்தமாக உலகின் பல்வேறு நிலையாமைகளைக் கூறுவதே 'காஞ்சி' என்னும் புறத்திணை ' என்பர் தொல்காப்பியர்.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை"

என்னும் களவியற் சூத்திரத்துள்,

"சிறந்தது பயிற்றல் இறந்ததன் கடனே"

என்பதிலும் அவர் வீடுபேற்றினை, "சிறந்தது" என்கின்ருர்.

"சிறப்பீனும்; செல்வமும் ஈனும்; அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனே உயிர்க்கு"

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு"

என்பன திருக்குறள். முதலிற் காட்டிய குறளின் உரைக் குறிப்பில் பரிமேலழகர், "எல்லாப் பேற்றினும் சிறந்ததாகலின், வீடு சிறப்பெனப்பட்டது" என விளக்கம் தந்தார்.

சிறந்த பயனுகிய வீட்டினைத் தருவது ஞானம் ஒன்றே. ஞானத்தினுலன்றி வேறு எந்த ஒன்றினுலும் வீட்டை அடைய இயலாது. மெய்கண்டதேவரும்,

"மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி அவை, ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடா ஆகலின்" என அறுதியிட்டு உரைத்தார். அதனையே அருணந்திதேவர்,

"ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம்
நல்ல ஆகமம் சொல்ல, அல்லவாம் என்னும்
ஊனத்தார் என்கடவர்"

என்று வேறெரு வகையாகக் கூறினர்.

ஞானுசாரியர்கள் :

எல்லாவற்றினும் மேலான பயனைத்தருவது ஞானமாகலின், அதன் தொடர்பான பொருள்களே எல்லாப் பொருள்களினும் மேலான பொருள்களாம். ஆகவே நூல்களில் சிறந்தவை ஞான நூல்களே. ஒழுக்கங்களில் சிறந்தவை ஞானஒழுக்கங்களே. மக்களில் சிறந்தோர் ஞானிகளே, ஆசாரியர்களில் சிறந்தோர் ஞானுசாரியர்களே. இப்படியே பலவற்றைக் கூறலாம்.

சைவ சமயத்தில் நாயன்மார்கள் முதலாக ஞானியர் பலர் விளங்கினர். சிறப்பாகச் சமயாசாரியர் சந்தானாசாரியர்கள் ஒப்புயர் வற்ற ஞானாசாரியர்களாய் விளங்கினர். அவர்களுள்ளும் ஞானத் தின் நிறை நிலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாய் விளங்கியவர் திருஞானசம்பந்தர்.

திருஞானசம்பந்தர் :

குழந்தைப் பருவம் மக்கட் பிறப்பில் சேர்த்து எண்ணப் படாதது என்பதற்குக் குழந்தையை அஃறிணையாக வழங்கும் வழக்கமே போதிய சான்று. அத்தகைய பருவமாகிய இரண்டு ஆண்டைக் கடந்து, மூன்றாவது ஆண்டு தொடங்குகின்ற அப்பொழுதே ஞானசம்பந்தர் ஞானத்தைப் பெற்றார். அதுவும், ஞானத்தையே திருமேனியாக உடைய அம்பிகையினது பாலை உண்டு அப்பொழுதே ஞானசம்பந்தராய்விட்டார். அனுபவ ஞானத்தோடு கலைஞானத்தையும் பெற்றது மட்டுமன்று; அந்தக் கலைஞானத்தை ஓதாதே உணர்ந்தமை ஞானசம்பந்தருக்கு உள்ள தனிச்சிறப்புக்களில் ஒன்று.

இன்ன பல காரணங்களால் ஞானசம்பந்தர் ஞானத்தின் நிறை நிலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்கினர். இவற்றை எல்லாம் நோக்கியே சேக்கிழார், ஞானசம்பந்தரிடம் ஞானம் ஒன்று தவிர எதுவும் காணப்படவில்லை என்ற கருத்தில் அவரை, "ஞானத்தின் திருவுரு" என்று அழகுபெறச் சிறப்பித்தார்.

"ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்"

என்பது அத்திருப்பாட்டு.

மறைஞானசம்பந்தர் :

"இப்படி ஒப்பதோர் அற்புதம் எங்குளது" என்று யாவரும் வியக்கும் வகையில் ஞானத்தைப்பெற்று விளங்கிய முதல் ஞானசம்பந்தர் சமயாசாரியர் நால்வர்களுள் ஒருவர். அவரது திருப்பெயரைத் தாங்கிச் சிறந்த ஞானாசாரியராய் விளங்கிய இரண்டாவது ஞானசம்பந்தர் சந்தான குரவருள் மூன்றுமவ ராகிய மறைஞானசம்பந்தராவர். இவர் அனுபவ ஞானத்தோடு

மறைகளை நன்குணர்ந்திருந்த காரணத்தால் மறைஞான சம்பந்தராயினர்.

குருஞானசம்பந்தர் :

இச்சந்தானத்தில் வந்த கமலை ஞானப்பிரகாச தேசிகர்பால் ஞானோபதேசம் பெற்று ஆசாரியரும் வியக்கும்வண்ணம் அநுபூதியில் திளைத்த மூன்றுவது ஞானசம்பந்தர் தருமை ஆதீன முதற்குரவராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

இவரது அனுபவ ஞானத்தின் மிகுதியை நன்குணர்ந்த இவர்தம் ஆசிரியர் ஞானப்பிரகாசர் அருளாணையின்படி இவர் தருமபுரத்தில் ஞான பீடத்தை நிறுவிச் சிறந்த ஞானசாரியராய் விளங்கிப் பலர்க்கு ஞானத்தை உபதேசித்தருளிய காரணத்தால் குருஞானசம்பந்தர் என்னும் திருப்பெயர் பெற்று விளங்கினர்.

சோழபாண்டிய நாடுகளில் சைவம் :

திருஞானசம்பந்தர் மூன்றுண்டிலேயே ஞானம் பெற்றது போலக் குருஞானசம்பந்தர் இளமையிலே தம் தாய் தந்தையரை விடுத்துச் சொக்கநாதரை அடைந்து அவரது அருளால் ஆன்மார்த்த மூர்த்தியைப் பெற்றுக் குருவருளை அடைந்து ஞானனுபவம் பெற்றுர். திருஞானசம்பந்தர் சோழநாட்டில் அவதரித்துப் பாண்டியனுடு சென்று சைவத்தைப் பரப்பியருளியது போல குருஞானசம்பந்தர் பாண்டிநாட்டில் அவதரித்துச் சோழநாடு போந்து ஞானபீடம்நிறுவிச் சைவ சமய பரிபாலனம் புரிந்தருவினர்.

திருஞானசம்பந்தர் ஞானம் பெற்ற திருமுலைப்பால் விழாவை அண்மையில் தருமை ஆதீனம் 26-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிகஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், அற்புத விளக்கம் முதலிய பல சிறப்புக்களுடன் உடன் இருந்து நடத்துவிக்க அன்பர்கள் திரண்டுவந்து கண்டு வணங்கிப் பயன்பெற்றனர்.

குருபூஜைப் பெருவிழா :

ஸ்ரீ குருஞானசம்பந்தரது ஆண்டுக் குருபூஜைப் பெருவிழாவையும் சமயப்பயிற்சி வகுப்பு திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு முதலிய பல சிறப்புக்களுடன் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்அவர்கள் அண்மையில் நடத்துவிக்க இருப்பது அன்பர்கட்கு நல்லதொரு வாய்ப்பாகஉள்ளது. அவ்வாய்ப்பினையும் பயன்படுத்திக்கொண்டு விழா நிகழ்ச்சிகளைப் பலரும் கண்டும், கேட்டும் ஞான மெய்ந்நெறியாம் நற்பயனைப் பெற்று உய்வார்களாக.

உ
குருபாதம்
தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

திருமந்திரம் பற்றி வழங்கிய

அருளுரை*

"தண்நிலவார் சடையார்தாம் தந்த ஆகமப்பொருளை
மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ்வகுப்பக்
கண்ணிய அத்திருவருளால் அவ்வுடலைக் கரப்பிக்க
எண்ணிறைந்த உணர்வுடையார் "ஈசர்அருள்" என
[உணர்ந்தார்."

இதோபதேசம் :

இன்று திருமந்திரத்தில் சில பாடல்களை அதில் காணுகின்ற எளிய - அரிய பொருள்களைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்குகின்றோம்.

ஏழாம் தந்திரத்தில் 'இதோபதேசம்' என்று ஒரு தலைப்பு உண்டு. அதில் உள்ள ஒரு பாடல் எல்லோராலும் சொல்லப்படுவது. அப்பாடல் :-

"ஒன்றே குலமும்; ஒருவனே தேவனும்;
நன்றே நினைமின்; நமனில்லை நாணுமே;
சென்றே புகுங்கதி யில்லை; நும்சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்ம்மினே."

முதல் வரியைப் பெரும்பாலும் எதற்காகச் சொல்லுகிறார்கள்? நம்நாட்டில் அளவற்ற சாதிகள் சொல்லப்படுகின்றன. அவையெல்லாம் அறியாமை வழிப்பட்ட ஒரு நம்பிக்கையேயொழிய, உண்மையல்ல; உண்மையில் மக்கள் எல்லோரும் ஓர்குலந்தான் என்று உணர்த்துதற்பொருட்டாகவே கூறுகின்றார்கள்.

---

* 26—11—75 அன்று திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் ஒலிபரப்பிய இலக்கியச் சோலைப் பகுதிக்கு வழங்கியருளியதைத் தழுவியது.

அவர்கள் கூற்றில் உண்மை இல்லாமல் இல்லை; உண்மை தான். பிறப்பினால் எல்லோரும் ஓர் குலந்தான். ஆனால் சிறப்பினால்கூட எல்லோரும் ஓர் குலமாய் இருக்கமுடியுமோ?

பிறப்பு ஒன்றாயிருப்பினும் அறிவு, ஒழுக்கம், பிற தகுதி முதலியன பலவாகத்தான் இருக்கின்றன, ஆகையால் அந்தத் தகுதி வேறுபாட்டினையும் 'இல்லை' என்று வாதிடுதல் இயலாது. இதைத் திருவள்ளுவர்,

" பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் "

என்று ஒரு குறளில் தெளிவாகவே கூறியுள்ளார். மேலும், 'அரசன் எல்லோரையும் ஒரே வகையாகக் கொண்டு நடத்துதல் கூடாது; வரிசையறிந்து அதற்கு ஏற்பவே நடத்தல் வேண்டும்' என்பதை,

" பொது நோக்கான் வேந்தன் வரிசையான் நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்".

என்னும் குறளால் கூறுகிறார். ஆசிரியர் இங்ஙனம் கூறியதன் காரணத்தை விளக்குமிடத்தில் பரிமேலழகர், " உயர்ந்தார் நீங்குதல் நோக்கிப் பொது நோக்கை விலக்கி, எல்லோரும் விடா தொழுகுதல் நோக்கி வரிசை நோக்கை விதித்தார்" எனக் கூறினர். இவற்றால் அனைவரையும் ஒரே தரத்தினராக எண்ணுதல் எத்துணைப் பொருத்தம் அற்றது என்பது விளங்கும்.

ஒன்றே குலம் :

திருமூலர், " ஒன்றே குலம் " எனக் கூறியது, ஒழுக்கம் முதலிய தகுதிபற்றி அமைந்த வேறுபாட்டினை மறுத்தற்காக அன்று. எந்த வேறுபாடுபற்றியும் மக்கள் பகை, பொறாமை முதலியன இன்றி, அன்பு அருள் முதலியன உடையவராய் ஒன்றி வாழவேண்டும் எனக் கூறியதேயாகும்.

திருமூலரது அந்தத் திருவாக்கு இன்னும் விரிந்த பொருள் உடையது. இறைவன் ஒருவனைத்தவிர ஏனையாவரும் பசுக்கள்; பாசத்தில் கட்டுண்டு கிடப்பவர்கள் என்பது பசுக்கள் என்பதற்குப் பொருளாகும். இறைவன் ஒருவனே பதி; அதாவது தலைவன்; ஆகையால் அந்தத் தலைவனது அடிமைகளாகிய உயிர்கள் தங்களுக்குள் சில வேற்றுமைகளைப்பாராட்டிக்கொண்டு வினைகளை ஈட்டிக்கொள்ளவேண்டுவதில்லை என்றுகூறியதேயாம். இப்பொருள், இதனை அடுத்துவருகின்ற " ஒருவனே தேவனும் " என்னும் தொடரால் விளங்குவதாகும்.

ஒருவனே தேவன் :

இனி, "ஒருவனே தேவனும்" என்னும் தொடரும் நுட்பமாக நோக்கத்தக்கதுதான். "ஒருவனே தேவன்" என்பதற்கு, 'உலகில் காணப்படும் தெய்வங்கள் அனைத்தும் தனித்தனிச் சுதந்திரமான தெய்வங்களாய்நின்று, தாம் தாம் தம் விருப்பப்படியே உயிர்களை ஆட்டிப் படைப்பன அல்ல; எல்லாத்தெய்வங்களும் ஒரு முழுமுதற்கடவுளது ஆற்றலின் பகுதிகளாய் நின்று தத்தமக்கு உரிய செயல்களைச் செய்வன என்பதே பொருள். இதற்கு அரசாட்சி முறை சிறந்த எடுத்துக்காட்டாகும்.

முடியாட்சியாயினும், குடியாட்சியாயினும் ஆட்சித் தலைவர் ஒருவரே. எல்லா அதிகாரங்களும் அவருடையனவே. ஆயினும், அந்த அதிகாரங்கள் பலவற்றையும் பலரிடத்தில் அவரவர் தகுதிக்கு ஏற்றவாறு ஒப்படைத்து நடத்தச்செய்கிறார். அதனால் அந்த அந்த அதிகாரிகளுக்கு உரிய மரியாதைகளை மறுக்கவும் முடியாது; அதேநேரத்தில் அவர்களைத் தனித்தனி ஆட்சித் தலைவர்களாகவோ அல்லது எல்லார்க்கும் மேலான ஆட்சித் தலைவர்களாகவோ நினைத்துவிடவும் முடியாது. நமது நாட்டின் ஆட்சி, அதிகாரப் முழுவதும் ஜனாதிபதி ஒருவரிடந்தான் உள்ளது. ஜனாதிபதியினுடைய அதிகாரம் பிரதமர் வாயிலாகப் பல மாநிலத்தலைவர்களையடைகிறது. அவர்களின் வாயிலாக ஒவ்வொரு மாநிலத்தில் இருக்கின்ற மாவட்டத் தலைவர்களுக்குச் சென்று, அவர்வழியாகக் கோட்டாட்சித்தலைவருக்குச் செல்கிறது. அடுத்து கர்ணம் வரையிலும் செல்கிறது. இப்படியாகக் கீழ் வந்த நிலையினாலேயே வரிப்பொருள் முதலிய எல்லாம் ஜனாதிபதியைச் சென்றடைகின்றன என்றாலும் அது பல மாநிலத் தலைவர் வழியாகவே நடக்கின்றது. ஒருவரே இல்லாமல் பலர் இருப்பதும் மக்கள் வசதியைக் கருதித்தான். அதுபோலத்தான் இறைவனும் உயிர்களின் நலம் கருதிப் பல தேவரை அமைத்துள்ளான். இதேநிலைமைதான் பல தெய்வங்கள் நிலையும். இந்த நிலை அரசியல் முறை அறிந்தவர்களுக்கு நன்றாக விளங்கும். அரசியல் முறைகளைச் சிந்திக்காதவர்களுக்கு இது புரிவது கடினந்தான்.

அவர்கள் தங்களுக்குத் தெரிந்த அதிகாரிகளையே எல்லா அதிகாரமும் உடையவர்களாகத்தான் கருதுவார்கள். அதுபோலத்தான் தத்துவ நெறியை உணராதவர்கள் நாட்டில் உள்ள பல தெய்வங்களையும் அது அது தனித்து நின்றே செயல்புரிவனவாக நினைக்கின்றார்கள். "அது பிழை என்பதை விளக்கத்தான் திருமூலர், "ஒருவனே தேவன்" என்று அருளிச் செய்தார். எனவே, இங்கு "தேவன்" என்றது முழுமுதற் பொருளை என்பது விளங்கும். முதற்கடவுள் ஒருவனே

என்பது பற்றி மற்றைய தெய்வங்களை விலக்க வேண்டும் என்பது கருத்தன்று. திருமந்திரத்திலேயே பிரமன், மாயோன், உருத்திரன், மற்றும் யமன், இந்திரன் முதலாகப் பலர் குறிப்பிடப்படுதல் காணலாம். "தெய்வம் இகழேல்" என்பது ஔவையார் வாக்கு. வேதத்தில் "ஏகம்சத்; விப்ரா பஹுதா வதந்தி" (முதற்கடவுள் ஒருவனே பல தெய்வங்களாகச் சொல்லப்படுகிறான்)என்றும் உபநிடதத்தில் "ஏகோஹிருத்ரோ நத்விதீயாய தஸ்து:" (இறைவன் - ஒருவனே உள்ளான்; இரண்டாவது இல்லை என்பது இதற்குப் பொருள்) என்றும் கூறப்படுகின்றன. எனவே அவரவர்க்கு விருப்பமான தெய்வத்தை இஷ்ட தேவதையாக வழிபடுதல் ஏற்புடையதே. ஆயினும் முதற் கடவுள் ஒருவனே என்பதை மறுத்தல் கூடாது. மறக்கவும் கூடாது.

நன்றே நினைமின் :

இனி, இவ்வுண்மைகளை யெல்லாம் தெரிந்துகொள்வதற்குப் பயன் யாருக்கும் - யாதோர் உயிருக்கும் தீங்கு நினையாது, நன்மையே நினைத்தல் வேண்டும். அதனை வற்புறுத்தவே, "நன்றே நினைமின்" என்றார். இவ்வாறு நன்றே நினைப்பவர்க்குப் பாவம் உண்டாகாது, ஆகையாலும் பெருநன்மையைச் செய்பவர்க்கு இறப்பில்லை யாகையாலும் "நமன் இல்லை" என்றும், இறப்பில்லை யாகவே பிறப்பும் இல்லை என்பது பற்றி "சென்றே புகுங் கதி இல்லை" என்றும் அதாவது பிறப்பில்லை என்றும் அருளிச் செய்தார். பிறப்புகள் பலவும் 'தேவகதி, மனிதகதி, விலங்கு கதி, நரககதி என நான்காகச் சொல்லப்படுதலை இங்கு நினைத்தல் வேண்டும். 'உயிர்கள் பிறவி எடுத்த ஈசிய இழிநிலைக்குக் கொஞ்சமும் கூசுவதில்லை' என்பதை "நாணுமே புகுங்கதி" என்பதனால் குறித்திருக்கின்றார்.

'இவை அனைத்தையும் உறுதிப்பட உணர்ந்தால் உய்தி கூடும்' என்பது "சித்தத்து நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே" என்னும் இறுதிப் பகுதியால் விளக்குகின்றார். இவை யெல்லாம் யாவர்க்கும் இதமாகிய உபதேசமேயன்றோ! இவையெல்லாவற்றையும் "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற பாடல் மூலம் அறிவிக்கிறார் திருமூலர்.

ஆசை அறுமின்கள் :

இனி மற்றொரு பாடல் திருமந்திரத்திற் பலரும் அறிந்தது:

" ஆசை அறுமின்கள்; ஆசை அறுமின்கள்;
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்; "

'ஈசனிடத்தில் ஆசையை விட்டுவிடுவது' என்றால், 'ஈசுர பக்தியும் உயிருக்குத் துன்பம் தருவது' என்றுதானே பொருளாகும்? அது பொருந்துமா? ஈசனை விட்டு உயிர்கள் எங்கே போவது? யாரைத் துணையாகக் கொள்வது? யாதொரு துணையும் இன்றித் தனித்து நிற்கும் தன்மை உயிருக்கு உண்டா? இவ்வாறு திருமூலர் சொல்வாரா? என்று இப்படியெல்லாம் எண்ணிப் பாராமலே, "ஈசனிடத்திலும் ஆசைவைக்கக்கூடாது" என்று திருமூலர் சொன்னதாகச்சிலர் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால், அதன் உண்மைப் பொருள் வேறாகும்.

ஆசை அல்லது அவா என்பது உலகப் பொருள்களின்மேல் செல்லும் ஆசையேயாகும். அது ஆணவ மலங் காரணமாக உண்டாவது. உயிர்கள் இறைவனை அடையவொட்டாமல் ஆணவ மலமே தடுப்பது. அது பக்குவமாகி இறைவனால் நீக்கப்பட்ட பொழுதும் அதன் வாசனை உயிர்களைத் தாக்கும் என்பர். ஆகவே, ஆணவ மலம் நீங்கி உயிர் இறைவனைச் சார்ந்த இடத்தும் ஆணவ வாசனை சிறிது நின்று முன்போலவே உலகப்பொருள்களின்மேல் ஆசையை உண்டாக்கும். 'அவ்விடத்தும் ஞானமாகிய கருவியால் அந்த ஆசையை அறுக்கவேண்டும்'' என்பதையே திருமூலர், "ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்" என்றார். "ஆயினும்" என்பதற்கு ஈசனோடு பொருந்திய இடத்தும்என்பது பொருள். அதாவது ஆணவத்தினாலே மனிதனுக்கு ஆசை உண்டாகிறது என்பதை நாம் தெளிவாகத் தெரிந்திருக்கின்றோம். உலகப் பொருள்களின் மேல் வரும் விருப்பத்தைத்தான் ஆசை என்று சொல்லுகின்றோம், இறைவனிடத்தில் உண்டாகும் விருப்பத்தை பக்தி என்று சொல்லுகின்றோம். அப்படி இறைவனை வழிபடும்உயிர், ஆணவம் அடங்கி இறைவனை அடையும். பெருங்காயம் வைத்திருந்த பாண்டத்திலே அப்பெருங்காய வாசனை கொஞ்சம் இருந்துகொண்டு இருப்பது போல, இறைவனை அடைந்த உயிர்களுக்கும் பழமையான ஆணவத் தொடர்பினாலே உலகப்பொருள்களின்மேல் ஆசை சிறிது உண்டாகத்தான் செய்யும்; அவ்வாசையையும் விட்டுவிட வேண்டும் என்பதற்குத்தான் "ஈசனோடாயினும் ஆசைஅறுமின்கள்'' என்று கூறியுள்ளார். இந்த நுட்பமான பொருளை நாம் ஊன்றிக் கவனிக்காமையினாலேயே "ஆண்டவனிடத்திலும் கூட நீ ஆசை கொள்ளாதே'' என்று சுலபமாகச் சொல்லி விடுகிறோம்.

இறைவனுக்குச் செய்யும் பூசை சில சமயங்களில் காமிய பூசையாக நிகழ்கின்றது. அதுவும் கூடாது என்பதையும், "ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்" என்ற தொடர் விளக்குகின்றது. "காமியம் செய்து காலம் கழியாதே" என்பது அப்பர்

திருவாக்கு. காமியம் என்றால் ஒரு பொருளை விரும்பி இறைவனை வழிபடுவது.

நான்கு தர்மங்கள் :

இனி மற்றொரு பாடல் மூலம் எல்லோருக்கும் செய்யக்கூடிய எளிய இனிய தர்மங்கள் சிலவற்றைத் திருமூலர் சொல்லுகின்றார். நான்கு வரியிலேயே நான்கு தர்மங்களைச் சொல்லியுள்ளார். எல்லோருக்கும் ஆகக்கூடியது. யாரும் இது என்னால் முடியாது என்று சொல்லிவிட முடியாது. அப்பாடல் வருமாறு :-

> " யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை ;
> யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை ;
> யாவர்க்கு மாம்உண் ணும் போதொரு கைப்பிடி ;
> யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே. "

யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை என்று கூறுகின்றார். ஒரு பச்சிலையை எடுத்து இறைவன் மீது சாத்தி அவனுடைய பெயரைச் சொல்வது யாருக்கும் கஷ்டம் இல்லை. இதற்காக முயற்சியும் தேவையில்லை. அடுத்தபடியாகச் சொன்னார்; யாவர்க்குமாம் பசுவிற்கு ஒரு வாயுறை " பசுவிற்கு ஒரு பிடி புல் கொடுப்பதில் யாருக்கும் பெரிய கஷ்டமில்லை. ஆனாலும் பசுவிற்குப் புல்கிடைக்க வில்லை என்கின்றனர் சிலர். பட்டினவாசிகளாக இருந்தால் பருத்திக்கொட்டையையாவது கொஞ்சம் வாங்கிக்கொடுத்தால் போதும். இல்லையானாலும் நாம் நெல் அரைக்கும் தவிட்டைக் கொடுத்தாலும் போதும். இல்லையானாலும் நாம் சாப்பிடும் ஒரு பிடி அரிசி கொடுக்கலாம். பசுவுக்குத்தான் கொடுப்பது என்ப தில்லை. அரிசியைப் பறவை இனங்களுக்கும் தெளிக்கலாம். எறும்புப் புற்றிலும் போடலாம். இதே மாதிரி ஒரு பிடி அரிசி எடுத்துப் போடுவதால் நூற்றுக்கணக்கான உயிர்களுக்குத் தருமம் செய்தவர்களாக ஆவோம். இப்படி எளிமையான மூன்று தர்மங்களைச் சொன்னார். இவையெல்லாம் கொஞ்சமாவது சிரமப் பட்டு செய்ய வேண்டியிருக்கும் என்று எண்ணி நாள்காவதாக ஒருதருமம் சொல்லுகின்றார். சிரமம் இல்லாது எளிதாகச் செய்யக் கூடிய தருமம் அது. நீ நல்லதையே பேசு. அப்படிப் பேசுகின்ற போதும் இனிமையாகப் பேசு. இது எல்லோருக்கும் முடியக் கூடியது என்கிறார் திருமூலர். யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரைதானே" இனிமையான வார்த்தை நம் நாவிலே இருக்கின்றபோது கடுமையான வார்த்தைகளைச் சொல்லாமல் இருப்பதே அறம். இவைபோலப் பொதுவாயுள்ளவற்றைச் சொல்லும் மந்திரங்களும் பல உண்டு, சிறப்பாகச் சைவ சமய உண்மைகளை எளிமையாகக் கூறும் மந்திரங்களும் திருமந்திர நூலில் பல உள்ளன. மக்கள் அவற்றைக் கற்றுத் தெளிந்து மாண்புறுவார்களாக.

—※—

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் வரலாறு

" இடையருப் பேரன்பும் மழைவாரும்
இணைவிழியும் உழவாரத்திண்
படையருத் திருக்கரமும் சிவபெருமான்
திருவடிக்கே பதித்தநெஞ்சும்
நடையருப் பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகைதன் ஞானப்பாடல்
தொடையருச் செவ்வாயும் சிவவேடப்
பொலிவழகுந் துதித்துவாழ்வாம்,"

—சிவஞான சுவாமிகள்.

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் என வழங்கும் திருநாவுக்கரசு நாயனர் கி. பி. ஏழாம் நூற்ருண்டின் தொடக்கத்தில், நடு நாட்டின் ஒரு பகுதியாகிய திருமுனைப்பாடி நாட்டில் கடலூர் – திருக்கோயிலூர் நெடுஞ்சாலையில் பண்ணுருட்டிக்குமேற்கே ஐந்துகல் தொலைவில் உள்ள திருவாமூரில் சைவ வேளாளர் குலத்தில் குறுக்கையர் குடியில் புகழனருக்கும் மாதினியாருக்கும் அருந்தவ மகவாய்த் தோன்றியவர். பெற்ருேரால் மருள் நீக்கியார் எனப்பெயரிடப் பெற்றவர்; கா வளர்த்தும், குளந்தொட்டும் விருந்தளித்தும் அறம்பல புரிந்தவர். நம்பர் அருளாமையினுல் சமண் சமயம் சார்ந்தவர். தமக்கை திலகவதியாரின் தவத்தாலும் இறைவனருளியருளையாலும் மீண்டும் திருவதிகையில் சிவநெறி சேர்ந்து தேவாரத் திருப்பதிகம் பாடி அருளியவர்.

அமணர் துர்ப்போதனையால் மகேந்திரவர்மப் பல்லவன் இவரை, நீற்றறையில் இட்டும், யானையைவிட்டு இடறச்செய்தும் நஞ்சு கலந்த பாற்சோறு ஊட்டியும், கல்லில் கட்டிக் கடலில் இட்டுப் பல்லாற்ருனும் துன்புறுத்திய போதும் இறையருளால் சாகாது பிழைத்து அற்புதங்கள் பல நிகழ்த்தியவர். அமணர் பிடிப்பிலிருந்த மகேந்திரவர்மப் பல்லவனைச் சைவ நெறிக்கு மாற்றியவர். தமிழகத்தில் தமிழும் சைவமும் தழைத்தோங்கச் செய்தவர். திருஞானசம்பந்தருடன் நட்புக்கொண்டு பல தலங்களையும் தரிசித்து 300 பதிகங்கட்குமேல் பாடியருளியவர். திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றுப் பஞ்சம் நீக்கியவர். வேதாரண்யத்தில் மறைக்கதவினைத் திறந்தருளியவர். திங்களூர் அப்பூதி அடிகளுடன் நட்புக்கொண்டு அரவு தீண்டி இறந்த அவரது மூத்த குமாரனைப் பிழைக்கச் செய்தவர். இறைவனுல் திருப்பைஞ்ஞீலியில் பொதிசோறளிக்கப்பெற்றவர். திருப்பூந்துருத்தியில் திங்களும், ஞாயிறும் தோயும் திருமடம் கட்டியவர்.

திருக்கயிலை யாத்திரை சென்று திருவையாற்றில் கயிலைக் காட்சி கண்டவர். பொன்னும் பெண்ணும் மயங்காத நடையருப் பெருந்துறவினர். சித்திரை மாதச் சதய நட்சத்திரத்தன்று திருப்புகலூரில் சிவபெருமான் திருவடியில் இரண்டறக் கலந்த சிறப்பினர்.

இத்தகைய சிறப்புடைய ஸ்ரீ திருநாவுக்கரசு நாயனருக்கு அவர் அவதரித்த திருவாமூரில் குருபூஜை விழா நடைபெறும். 22, 23, 24—4—76 ஆகிய நாட்களில் நிகழும் ஸ்ரீ அப்பர்சுவாமிகள் குருபூஜைவிழாவை முன்னிட்டு ஸ்ரீபசுபதீசுவரருக்கும் ஸ்ரீ அப்பர் சுவாமிகளுக்கும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெறும். அன்பர்கள் வந்து வழிபட்டு ஸ்ரீ அப்பர் பெருமானின் அருள் பெறுவார்களாக.

அப்பர் அருந்தமிழ் மாநாடு

பட்டிமண்டபம் :

22—4—76 வியாழக்கிழமை மாலை திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (குன்றக்குடி அடிகளார்) தலைமையில், அப்பர் தேவாரத்தில் விஞ்சி நிற்பது, தத்துவ உணர்வா? பத்தி உணர்வா? என்ற தலைப்பில் பட்டி மண்டபம் நிகழும். திரு. அ. அறிவொளி, திரு. சோம. இளவரசு, திரு. ஆ. சிவலிங்கனார், திரு. சு. சாமிஐயா, திரு. அழ. பழனியப்பன், திரு. அ. கலிய பெருமாள் ஆகியோர் பட்டி மண்டபத்தில் கலந்து கொள் கின்றனர்.

பண்ணாராய்ச்சி மாநாடும் கருத்தரங்கமும் :

23—4—76 வெள்ளிக்கிழமை காலை பியந்தைக்காந்தாரப்பண் பற்றிய பண்ணாராய்ச்சி மாநாடு, திருக்காருயில், திரு தெ. நடராச தேசிகர் அவர்கள் தலைமையில் நடைபெறும். பல சிறந்த ஓதுவா மூர்த்திகள் கலந்துகொள்கின்றனர். அன்றுமாலை திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் கருத்தரங்கம் நடைபெறும். தவத்திரு. ஊரனடிகளார், திரு புர. சுவாமிநாதமுதலியார், திரு. வேங்கடபதி ஆகியோர் கருத்தரங்கில் விரிவுரையாற்றுவார்கள்.

பட்டம் வழங்கல் :

24—4—76 சனிக்கிழமை தருமை ஆதீனம் 26 - ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழிபாடு நிகழ்த்தி அப்பர் சுவாமிகள்

திருமுன்னர் திருக்காருயில் திரு. தெ. நடராசதேசிகர் அவர்கட்கு "திருமுறைக் கலாநிதி" என்ற பட்டம் வழங்கிப் பொன்னடை போர்த்தி, பொற்கிழி அளித்து ஆசி அருள்வார்கள்.

கவியரங்கம் :

அண்ணுமலைப்பல்கலைக்கழகம் டாக்டர் திரு. சோ. ந. கந்தசாமி அவர்கள் தலைமையில் கவியரங்கம் நடைபெறும். "அப்பர்பால் அன்புடையோர்" என்பது கவியரங்கத்தின் பொருளாக அமைந்துள்ளது. டாக்டர் திரு. சொ. சிங்காரவேலனர், திரு. ஆ. சிவலிங்கனர் திரு. மா. வே. பசுபதி, திரு. சோம. இளவரசு திரு. அ. கலியபெருமாள், மனம். சேர சந்திரகாசன் ஆகியோர் கவியரங்கில் கலந்துகொள்கின்றனர்.

கருத்தரங்கம் :

மாலையில் திரு. ஆர். கனகசபைப் பிள்ளை அவர்கள் தலைமையில் கருத்தரங்கம் நடைபெறும். திரு. அ நடேச முதலியார், திரு. ச. தண்டபாணி தேசிகர், டாக்டர் திரு. வை. இரத்தின சபாபதி ஆகியோர் கருத்தரங்கில் கலந்துகொள்கின்றனர்

குறிப்பு:- (1) பொருள் உதவிபுரிவோர் திரு G. வாகீசம் பிள்ளை - செயலர், "திருவாமூர் அருள்மிகு அப்பர் சுவாமிகள் குருபூசை விழாக்குழு, கனகசபை நகர், சிதம்பரம், தெ. ஆ. மாவட்டம்" என்ற முகவரிக்கு அனுப்பி ரசீது பெற்றுக் கொள்ளவும்.

(2) ஸ்ரீ பசுபதீசுவரர், ஸ்ரீ அப்பர்சுவாமிகள் வழிபாட்டிற்கு அபிஷேக திரவியங்கள் கொடுக்கலாம். சமாராதனைக்குரிய பொருள்களையும் அப்பர் ஆலய அலுவலகத்தில் சேர்ப்பித்து இரசீது பெறலாம். உயர்ந்த கேஞேஜ் பன்னீர் அலுவலகத்திலேயே விலைக்குக்கிடைக்கும்.

(3) 20—4—76 க்குப் பின் பணம், பண்டம் அனுப்புவோர், செயலர், அப்பர் சுவாமிகள் குருபூசை விழாக்குழு, திருவாமூர், பண்ணுருட்டி வழி என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(4) சிவபூசகர்கள் சிதம்பரத்திலிருந்து பாதயாத்திரையாகப் புறப்பட்டுத் திருவாமூரை யடைந்து மூன்று நாட்கள் சிவபூசை செய்து பன்னிரு திருமுறைப் பாராயணம் நிகழ்த்துவார்கள்.

இந்து சமய விளக்கம்

'இந்திய நாட்டில் பெரும்பான்மையாய் உள்ள சமயம் எது?' என்று கேட்டால், 'இந்து சமயம்' என்ற ஒரே விடையைப் பலரும் கூறக் கேட்கலாம். ஆயினும் 'இந்து சமயம்' என்று ஒரு சமயம் இல்லை. அது குறிப்பிட்ட ஒரு சமயத்தின் தனிப் பெயர் அன்று; பல சமயங்களுக்குப் பொதுவான ஒரு பெயரே.

வேறுபட்ட பல சமயங்கள் ஒரு பொதுப் பெயரால் குறிப்பிடப்படுகின்றன என்றால், பல வேற்றுமைகளோடு அவற்றிற்குள்ளே ஓர் ஒற்றுமையும் இருத்தல் வேண்டும். 'இந்து சமயம்' என்பவற்றுக்குள் இருக்கின்ற ஒற்றுமை யாது? "வேதம் முதல் நூல் - இறை நூல் – உண்மை நூல்" என்பதில் கருத்து வேறுபாடின்றி ஒப்புக்கொள்வதே 'இந்து சமயம்' என்பவற்றிற்கிடையேயுள்ள சிறப்பான ஓர் ஒற்றுமை.

'இந்து' என்னும் பெயர் பழைய பெயர் அன்று; ஆங்கிலேயர்கள் வாணிகக் குழுவினராய் இந்தியாவிற்கு வந்த காலத்தில் அவர்கள் வைத்த பெயரே இது. 'சிந்து சமவெளியில் தங்கியிருந்த மக்களால் பாடப்பட்டதே வேதம்' என்பது அவர்களது கொள்கையாதலால், 'சிந்து மதம்' என்பதே நாளடைவில் 'ஹிந்து மதம் – இந்து மதம்' என்று மாறிவிட்டது என்பது ஆராய்ச்சியாளரது கருத்து. எனவே 'வேத மதம்' என்பதே இதற்கும் பொருளாதலை அறியலாம்.

'இந்து மதம்' என்னும்பெயரால் குறிக்கப்படுகின்ற எல்லா மதமும் வேதத்தை ஒப்புக்கொண்டபோதிலும் தான், தான் கூறும் பொருளே வேதத்தின் உண்மைப் பொருள் என்று சொல்லி, அது அதுவும் தான் தான் உண்மையான வேத மதம் என்று சொல்லுகின்றன. ஆகையால், எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தையும் 'இதுதான் இந்து மதம்' என்று நினைப்பது, அல்லது சொல்லுவது பொருளற்றது ஒன்றாகும்.

வைதிகம் – அதாவது வேத நெறியே இந்து மதம் ஆதலால், அந்தப் பொதுமைக்குள் சிறப்பாக உள்ள பல நெறி மதங்களும் வேதநெறியின் பல்வேறு துறைகளாகும். அத்துறைகள் பல வற்றிலும் சிறந்த துறை சைவ சமயம், இதைத்தான் சேக்கிழார் "மிகுசைவத்துறை" என்றார்.

தமிழ்நாட்டில் சமண பௌத்த மதங்கள் அரசரது ஆதரவால் செல்வாக்குப் பெற்ற காலத்தில் வேதநெறியும், அதன் துறைகளாகிய பல சமயங்களும் மறையும் நிலை அடைந்த பொழுது - திருஞானசம்பந்தர் முதலிய சமயாசாரியர் நால்வரும் சிறப்பாக – சம்பந்தரும், அப்பரும் வேதத்திற்குப் புறம்பான சமயங்களைக் களைந்து முன்போல வேதநெறி தழைத்தோங்கவும் மிகு சைவத்துறை விளங்கவும் செய்தார்கள். ஆகவே, வேதநெறியாகிய இந்து சமயத்தின் துறைகள் பலவும் சம்பந்தரையும் அப்பரையும் சிறப்பாகப் போற்றக் கடமைப் பட்டவை.

சமயாசாரியர்கள் வேதநெறி தழைத்தோங்கவும், மிகு சைவத்துறை விளங்கவும் செய்த பல்லாண்டுகளுக்குப் பின்னர் வேதாந்த சூத்திரத்தின் வழியும், அதன் உரைகளின் வழியும் தமிழ் நாட்டில் வேதநெறியில் சில குழப்பங்கள் தோன்றலாயின. அந்தச் சமயத்தில்தான் மெய்கண்டதேவர் தோன்றி அருணந்தி தேவர், திருவதிகை மனவாசகங்கடந்தார் முதலிய மாணக்கர்கட்கு உண்மையை உபதேசித்தும், 'சிவஞானபோதம்' என்னும் அரிய தத்துவ நூலைச் செய்து அதன் பொருளை விளக்கியும் வேதநெறி மிகு சைவத்துறை என்பவற்றின் உண்மைத் தத்துவங்களை இனிது விளங்கச் செய்தார். அங்ஙனம் விளக்கப்பட்ட சமயமே இன்று 'சித்தாந்த சைவம்' எனப்படுகின்றது. மெய்கண்ட சமயமாகிய இது சமயாசாரியர்கள் விளக்கியருளிய மிகு சைவத்துறையேயன்றி வேறன்று. ஆகவே, உண்மை வேத மதம் சித்தாந்த சைவமே ஆகையால், இதுவே உண்மை இந்து மதமாகும்.

மெய்கண்டாரிடமிருந்து அருணந்தி சிவம் முதலாக மெய்கண்ட சந்தானம் வளர்ச்சியுற்று, சித்தாந்த ஞானோபதேசமும் சித்தாந்த ஞான நூல்களும் பெருகின. இந்நூல்கள் சமயங்களை புறப்புறம், புறம், அகப்புறம், அகம் எனக் கொள்ளத்தக்க வகையில் வைத்து அவற்றில் உள்ள பொருந்தாக் கொள்கைகளை மறுத்து, சித்தாந்தத்தை நிலைநாட்டுகின்றன. புறப்புறம் முதலிய நான்கில் ஒவ்வொன்றிலும் ஆறு ஆறாக இருபத்து நான்கு மதங்கள் சொல்லப்படுகின்றன. அவை அனைத்திற்கும் அப்பாற்பட்டது மெய்கண்ட சமயமாகிய சித்தாந்த சைவம்.

'புறப் புறம், புறம், அகப்புறம், அகம்' என்னும் வேறுபாடு கீழ்க்காணும் காரணத்தால் கொள்ளப்படுகின்றது.

1 'வேதம், சிவாகமம்' என்னும் இரண்டும் உண்மை முதல் நூல்கள். இவற்றுள் ஒன்றையும் உடன்படாதன புறப் புறச் சமயங்கள். இவை :-

(1) உலகாயதம், (2) மாத்தியமிகம், (3) யோகாசாரம் (4) வைபாடிகம், (5) சௌத்திராந்திகம் (இவை நான்கும் பௌத்தமே) (6) சமணம் (சமணத்திலும் ஆசீவகம், நிகண்ட வாதம் என்ற இரு பிரிவு உண்டு)

II வேதத்தை மட்டும் உடன்பட்டுச் சிவாகமத்தை உடன் படாதன புறச்சமயங்கள். இவை :-

(1) தருக்கம் (2) மீமாஞ்சை (3) ஏகான்மவாதம் (4) சாங்கியம் (5) யோகம் (6) பாஞ்சராத்திரம் (வைணவம்)

III வேதம், சிவாகமம் இரண்டையும் உடன்பட்டாலும் வேறு நூல்களையும் முதல் நூல்களாகக் கொள்வன அகப்புறச் சமயங்கள். இவை :-

(1) பாசுபதம் (2) மாவிரதம் (3) காபாலிகம் (4) வாமம் (5) வைரவம் (6) ஐக்கியவாத சைவம்.

IV வேறு நூல்களைக் கொள்ளாது வேத சிவாகமங்களையே கொண்ட போதிலும் அவற்றிற்குப் பொருள் கொள்வதில் - பெரும்பாலும் முத்திநிலையில், மாறுபட்ட கொள்கைகளைக் கொண்டவை அகச்சமயங்கள்.

(1) பாடாண வாத சைவம் (2) பேதவாத சைவம், (3) சிவசமவாத சைவம் (4) சிவசங்கிராந்த வாதசைவம் (5) ஈசுர அவிகாரவாத சைவம், (6) சிவாத்துவித சைவம். (சுத்த சைவம்) என்பதும் ஒன்று உண்டு.

இவை யனைத்திற்கும் அப்பாற்பட்டது சித்தாந்த சைவம் - இதன்கொள்கைகளோ சித்தாந்த சாத்திரங்களால்கூறப்படுவன.

சித்தாந்த சைவம் விரிந்த பெருநெறியாய் எல்லாச் சமயங்களையும் அரவணைத்துக்கொண்டு அவைஅனைத்தினும் மேலாக விளங்குகின்றது. இதுபற்றியே தாயுமானவர்,

' இப்பரிசாம் சமயமுமாய் அல்லவாகி யாதுசம யமும்வணங்கும்
[இயல்பதாகி........
ராஜாங்கத்தில் அமர்ந்தது வைதிக சைவம் அழகி தந்தோ!"

என்றார். வைதிக சைவம் என்பது சித்தாந்த சைவம் என்பதே தாயுமானவர் கருத்தாதல் வெளிப்படை.

பன்னிரண்டாம் திருமுறை - திருத்தொண்டர் புராணம் உணர்த்தும் இலக்கியக் கொள்கை

மும்மொழிக்கொண்டல்,
பேராசிரியர்,
திரு. பெ. திருஞானசம்பந்தம் எம். ஏ., எல். டி.

. (மலர் 35, இதழ் 4, பக்கம் 180 இன் தொடர்ச்சி)

சேக்கிழார் தம் காலத்து மரபையொட்டியே பெருங் காப்பியத்தின் இலக்கணங்கள் அமையப்பெற்ற ஒன்றாகத் தமது நூலை இயற்றத் திட்டமிட்டார் எனத் தோன்றுகிறது. 'வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றினொன்று'[18] இயலுதல்வேண்டும் என்று பெருங்காப்பிய இலக்கணத் தொடக்கத்தில் தண்டி ஆசிரியர் கூறுகிறார். 'உலகெலாம்' என்று தில்லைக்கூத்தன் அடி எடுத்துக்கொடுத்த முதற் பாட்டிலேயே 'வணங்குவாம்' என்றதால் தெய்வ வணக்கமும், 'வாழ்த்தி' என்பதால் வாழ்த்தும் கூறப்பட்டன. 'மலர்சிலம்படி வாழ்த்தி' என்றதனால் இறைவன் திருவடியையே பற்றுக்கோடாகக்கொண்டு வாழ்ந்த உயர்ந்த அடியார்களைக் குறிப்பதாகக்கொண்டு 'வருபொருள்' சுட்டியதாகவும் கொள்ளலாம். ஒரு நூல் மங்கலச் சொல்லோடு தொடங்கவேண்டும் என்பது ஆசிரியர்கள் பின்பற்றிவரும் மரபு. இம்மாக்கதையோ தொடக்கத்திலும் இடையிலும் இறுதியிலும் 'உலகெலாம்' என்ற அருள் வாக்கைக்கொண்ட பெருஞ்சிறப்பினை உடையது. 'காவ்யாதர்சம்' என்ற அணி நூலை ஏழாம் நூற்றாண்டில் காஞ்சியில் வாழ்ந்த தண்டி என்னும் வடமொழிப் புலவர் எழுதியுள்ளார். தமிழ்த்தண்டி அலங்கார ஆசிரியர் சேக்கிழாரின் சம காலத்தவராகக் கருதப்படுகின்றவர். பெருங்காப்பிய இலக்கணம் இரு நூல்களிலும் ஒரே தன்மையதாக இருப்பதைக் காண்கிறோம்.

'அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாற்பொருள்களைப் பயக்கும் நீதிநெறிகளைப் பெருங்காப்பியம் உடையதாதல் வேண்டும்' என்று தண்டியாசிரியர் கூறுகிறார். இதனையே காவ்யாதர்ச

---

18 தண்டி அலங்காரம், 7.

ஆசிரியர் 'சதுர்வர்க்க பலோபேதம்' என்ற தொடரில் குறிக்கிறார். இவற்றுள் அறம், பொருள், இன்பம் ஆகியவற்றைப் பிற காப்பியங்கள் கூறிச்செல்ல, அவற்றுடன் வீடுபேற்றையும் சேக்கிழார் காப்பியம் சிறப்பித்துக் கூறுவதைக் காண்கிறோம்.

இல்லறம் துறவறம் ஆகிய இரண்டுமே வீடுபேற்றை உய்க்க வல்லன என்பதை, 'காமஞ்சான்ற கடைக்கோட்காலை ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி, அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ், சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே' 19 என்று தொல்காப்பியச் சூத்திரத்தில் பார்க்கிறோம். திருநீலகண்டர், இயற்பகையார் ஆகியோர் இல்லறத்தினின்றே முத்தியின்பம் பெற்றவர்கள்; மூர்த்தியார், அப்பர் முதலானோர் துறவறத்தினின்று முத்தியின்பம் பெற்றவர்கள்.

பொருட்செல்வம் பெற்ற அடியார்கள், நல்லாற்றின் அப்பொருளை ஈட்டியவர்கள், ஈட்டிய பொருளை அறத்தைவளர்க்கவே பயன்படுத்தினார்கள்; அழியும் சிறுபொருளைத்தந்து அழியாப் பெரும்பொருளைக் கொண்ட சதுரர்கள். புறப் பொருளான போர்ச்செயல் இயற்பகையார், புகழ்ச்சோழர் முதலானோர் வரலாறுகளில் பேசப்படுகிறது.

அடியார் பலர் வரலாறுகளிலே இன்பம் கற்பியலிலே வைத்துப் பாடப்பட்டுள்ளது.

அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் வீடுபேற்றிற்குத் துணைபுரிவனவாக இப்புராணத்தில் பல இடங்களிலும் விளக்கப்படுகின்றன. வீட்டின்பத்திற்கு மேலும் ஒருநிலை உளதானால் அதனையும் விழைபவர் அடியவர்கள் என்று 'கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி வீடும்வேண்டாவிறலின் விளங்கினார்' 20 என்ற திருக்கூட்டச் சிறப்பு வரிகள் உணர்த்துகின்றன.

பெருங்காப்பிய இலக்கணத்திற்கேற்ப மலைக்குக் கயிலையும், நாட்டிற்குச் சோழநாடும், நகருக்குத் திருவாரூரும் நூலின் தொடக்கத்தில் வருணிக்கப்படுகின்றன. இவையன்றி அந்தந்த நாயனார் வரலாற்றிலும் உரிய அளவு இவை வருணிக்கப்படுகின்றன. 'பருவம், இருசுடர்த்தோற்றம்' ஆகியனவும் ஆங்காங்கே கவிநயத்துடன் விளக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக தடுத்தாட்கொண்டபுராணத்தில் 'தேமருதொடையல் மார்பன் திருமணக் கோலங்காணக் காமுறு மனத்தான் போலக் கதிரவன் உதயஞ்

19 தொல்காப்பியம்—பொருள்—192.

20 தி. பு. திருக்கூட்டச் சிறப்பு, 8.

செய்தான் " 21 எனவும் ' நறுமலர்க் கங்குல் நங்கைமுன்கொண்ட புன்முறுவலென்ன முகிழ்த்தது வெண்ணிலா ' 22 எனவும் இரு சுடர்த்தோற்றம் வருணிக்கப்பட்டுள்ளது. 'நன்மணம் புணர்தல்' சம்பந்தர், சுந்தரர் வரலாற்றிலும், புனல் விளையாடல் ' சேரமான் வரலாற்றிலும், ' முடிகவித்தல் ' கூற்றுவர் முதலானோர் வரலாறுகளிலும், ' புலவி ' சுந்தரர், திருநீலகண்டத்துக் குயவனார் வரலாறுகளிலும், ' மந்திரம் ' மனுநீதிச் சோழன் வரலாற்றிலும் காணப்பட்டன. ' தூது ' சுந்தரர் வரலாற்றிலும், ' செலவு, இகல், வென்றி ' முதலியன புகழ்ச்சோழர் முதலியோர் வரலாறுகளிலும் காணலாம்.

பக்திச்சுவையும் வெவ்வேறு பாவங்களும் ஆங்காங்கு பொலிவுற எடுத்துக் காட்டப்பட்டுள்ளன என்பதைப் பிறிதோரிடத்தில் கூறியிருக்கிறேன். சந்திகள் ஐந்தும் அவற்றின் உறுப்புக்களும் பெரும்பாலும் நாடகங்களில் அமைக்கப்பெறுவன. ஒரே நாயகன் தொடக்கம் முதல் இறுதிவரை இடையறாது காட்சிதருகின்ற காப்பியத்தில் ஒருவாறு அவற்றைக்காண இயலுமேயன்றி, அறுபத்துமூன்று நாயன்மார்கள் வரலாற்றைக் கூறும் இக்காப்பியத்தில் காணமுயல்வது பயனற்றது. சேக்கிழார் தமது புராண அமைப்பையும் சருக்கங்களின் தலைப்புக்களையும்கூட " நம்பியாண்டார் நம்பி புந்தியாரப்புகன்ற வகையினால் வந்தவாறு வழாமல் இயம்புவாம் ' 23 என்று வரையறை செய்துகொண்டமையால் பெருங்காப்பியத்தின் இலக்கணங்களை இயன்ற அளவு, தான் வகுத்துக்கொண்ட குறிக்கோளுக்குட்பட்டு அமைத்திருக்கிறார் என்று கொள்ளலாம்.

சி. கே. சுப்பிரமணியமுதலியாரவர்கள் நூற்பாயிரத்தின்முதற் பாட்டின் விளக்க உரையில், ' இதுஒரு பெருங்காப்பியம். அங்ஙனமன்றிப் பலசரிதங்கள் சேர்ந்த ஒரு கோவை எனச் சிலர் எண்ணுவர்; அது சரியன்று. சுந்தரமூர்த்திகளைத் தலைவராகவும், பரவையார், சங்கிலியார் என்ற இருவரையும் தலைவியராகவும் கொண்டு, அவர்கள் கயிலையிலிருந்து ஒரு காரணம் பற்றிப் பூவுலகத்தில் அவதரித்து, மணந்து, உலகத்தார்க்கு அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களையும் காட்டி, உணர்த்தி உய்வித்து மீண்டும் திருக்கயிலை சேர்ந்தார்கள் என்பது காப்பியத்தின் உட்பொருள் ' 24 எனக் கூறியுள்ளார்.

---

21 தி. பு. தடுத்தாட்கொண்ட புராணம், 13.
22 தி. பு. தடுத்தாட்கொண்ட புராணம், 160.
23 தி. பு. திருமலைச் சிறப்பு, 39.
24 தி. பு. முதற் பகுதி – சி. கே. சுப்பிரமணிய முதலியார் உரை – ப. 1.

' ஒரு காவியத்தினுடைய நிறைவும் பொலிவும் எதில்அடங்கியிருக்கிறதென்றால் அதிலே போற்றப்படும் நாயகனின் மாகாத்மியத்தில் தான் ' என்பது ஆன்றோர் வாக்கு. 'செப்பலுற்றபொருளின் சிறப்பினால், அப்பொருட்குரையாவருங்கொள்வரால்' 24அ என்ற சேக்கிழார் வாக்கும் இதற்கு அரண் செய்வதாகும். ஒரு காப்பியத்தில் தலைசிறந்த ஒரு நாயகனே கவிஞனால் பெரும்பகுதியில் பாராட்டப்பெறுவது மரபாக இருக்கிறது. இராமாயணத்தில் இராமனும், சிலப்பதிகாரத்தில் கோவலனும், சாகுந்தலத்தில் அஷ்யந்தனும், சீவக சிந்தாமணியில் சீவகனும், யாதவாப்யுதத்தில் கிருஷ்ணனும் நாயகனாக இருக்க அவனையே பன்னிப் பன்னிப் பேசுகின்றன அக்காவியங்கள்.

திருத்தொண்டர் புராணத்திலோ வெனில், தடுத்தாட்கொண்ட புராணத்தில் சுந்தரர் பிறப்பு முதல் திருத்தொண்டத்தொகை பாடி முடித்தவரை கூறி, பின்னர்ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியிலும், சுந்தரரது வாழ்க்கையைத் தொடர்ந்து கூறிச்செல்கிறார் ஆசிரியர். இடையில் ஏயர்கோன் கலிக்காமர் புராணத்திலும் இறுதியில் கழறிற்றறிவார் புராணத்திலும் சுந்தரர் வரலாற்றைக்கூறிமுடிக்கிறார். இராமன், கோவலன், துஷ்யந்தன், சீவகன், கிருஷ்ணன் போல நூல் முழுவதிலும் சுந்தரர் வரலாறு தொடர்ந்து கூறப்பெறவில்லை. மாறாக 63 தனியடியார்களும் 9 தொகையடியார்களும் போற்றப்படுகின்றனர். தொகையடியார்களை நீக்கினாலும் 63 தனியடியார்களைக் காப்பிய நாயகர்கள் என்று கூறுவது பொருந்துமாறில்லை. ஆகவே தண்டி, மகாகாவியத்தின் இலக்கணத்தைக் கூறுமிடத்தில் தன்னிகரில்லாத் தலைவனை உடைத்தாய் என்ற பகுதி இந்நூலுக்குப் பொருந்தாமையால் 'கூறிய உறுப்பிற்சில குறைந்தியலினும், வேறுபாடின்றெனவிளம்பினர் புலவர்' 25 என்ற தண்டியின் சூத்திரத்தைக் கொண்டு ஒருவாறு அமைதி பெறலாம்.

' நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக் கற்றோர் புனையும் பெற்றிய தென்ப ' என்ற தண்டியலங்கார சூத்திரப் பகுதியில் ' மிக்க சுவையும் பாவமும் உடைமையால் யாவரும் விரும்பும்படி கவிஞரால் அலங்கரித்துப் பாடப்படுந்தன்மை உடையது பெருங்காப்பியம் ' என்ற கருத்து கூறப்பட்டுள்ளது.

(தொடரும்)

---

24 அ. தி. பு. பாயிரம், 7.

25 தண்டி அலங்காரம், 8.

சிவஞானசித்தியார் தெளிபொருள் விளக்கம்

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி
திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

(மலர் 35. இதழ் 4. பக்கம் 173 இன் தொடர்ச்சி)

ஓங்கிய உருவ மோடும்
　　வேதனை குறிப்பி னோடும்
தாங்கு பாவனைவிஞ் ஞானம்
　　தாம்இவை ஐந்தும் கூடிப்
பாங்கினுல் சந்தா னத்தில்
　　கெடுவது பந்த துக்கம்
ஆங்கவை பொன்றக் கேடாய்
　　அழிவது முத்தி யின்பம். 93.

இதன் தெளிபொருள்

கந்தங்கள் (கூட்டங்கள்) ஐந்து. அவை, ' உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்பன. இவை ஐந்தும் கூடிய வகையில் பொருள்கள் ஒரு கணத்தில் தோன்றி மறு கணத்தில் அழியும். அழிந்த பொருளின் சார்பில் மற்றொரு பொருள் பின் தோன்றி அழியும். இந்தத் தோற்ற நாசங்கள் இடையறாது நீரோட்டம் போல் நிகழ்வதே துன்ப நிலையாகிய பந்தமாகும். ஐந்து கந்தங்களும் தோன்றுதல் இன்றி அறவே கெட்டொழிதலே இன்ப நிலையாகிய முத்தியாம்.

விளக்கம்

ஐந்து கந்தங்களில் உருவக் கந்தம் எட்டு. அவை பூத உரு நான்கு, உபாதாய உரு நான்கு. இவை மேல், "மண்புனல் அனல் கால்" என்னும் செய்யுளில் சொல்லப்பட்டன.

வேதனைக் கந்தம் மூன்று. அவை, குசலம், அகுசலம், குசலா குசலம் ' என்பன. இவை இன்பம், துன்பம், இவை யிரண்டன் கலப்பு ஆதல் அறிக.

குறிப்புக் கந்தம் ஆறு. அவை, சோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம், மனம் ' என்பன.

பாவனைக் கந்தம் இருபது. அவை, தீக்குணம் பத்தும், நற்குணம் பத்துமாம்; தீக்குணம் பத்தாவன ' பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல் ' என்னும் வாக்கின் குற்றம் நான்கும், ' களவு, கொலை, பயனில் செயல் ' என்னும் காயத்தின் குற்றம் மூன்றும், ' கொல்ல நினைத்தல், காமம், அவா ' என்னும் மனத்தின் குற்றம் மூன்றுமாம்.

நற்குணம் பத்தாவன, ' மெய்யுரை, புகழுரை, இன்னுரை, உறுதியுரை ' என்னும் வாக்கின் குணம் நான்கும், ' பள்ளி, வணக்கம், தவம், தானம் ' என்னும் காயத்தின்குணம் மூன்றும், ' அருள், அவா இன்மை, தவவேட்கை ' என்னும் மனத்தின் குணம் மூன்றுமாம்.

விஞ்ஞான கந்தம் ஆறு. அவை, சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், சித்தம் ' என்பன.

ஆக நாற்பத்து மூன்றும் பஞ்ச கந்த பேதங்களாம்.

இதனால், பௌத்த மதத்தின் தத்துவங்களும், அது கூறும் பந்த இயல்பு வீட்டியல்புகளும் விளக்கப்பட்டன. (30)

அழித்திடும் அராக மாதி
அகற்றிநல் அறங்கள் பூரித்
திழித்திடும் புலன்கள் போக்கி
இன்பொடு துன்பம் வாட்டிப்
பழித்திடாப் பழுதில் வாழ்க்கை
எட்டையும் பாரித் தெல்லாம்
ஒழித்திடும் ஞான சீலம்
சமாதியின் உறுதி யாமே. 94.

இதன் தெளிபொருள்

கெடுத்தலை உடைய காமாதி பகைகளைப் போக்கி, நன்மை பைத்தரும் அறங்கள் பலவற்றையும் செய்து உயிரைக் கீழ்ப்படுத்துகின்ற ஐம்புலன்களை அகற்றி, இன்பத் துன்ப அனுபவத்தைத் துறந்து, நல்வாழ்க்கை எட்டையும் ஒழித்து ஒழுகுவதாகிய ஞான சீலம் ' சமாதி ' என்னும் நன்னிலையாம்,

விளக்கம்

நல்வாழ்க்கை எட்டாவன :- ' நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல் நுகர்ச்சி, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லிணக்கம் ' என்பன.

இவற்றின் மறுதலையே தீவாழ்க்கை எட்டாம்.

இதனால் பௌத்த மதத்தின் சாதனையாகிய ஒழுக்கம் விளக்கப்பட்டது. (31)

பௌத்தரில் சௌத்திராந்திகன் மதம்

முற்றிற்று.

தருமையாதீனம் ஞானசம்பந்தம் பதிப்பக வெளியீடு:

புவனாம்பிகை கலைக்ஞானதீபம்

வெளியீடு எண் 440. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் இராக்ஷச - ஆவணிமூல விழா மலராக இரண்டாம்பதிப்பாக வெளியிடப்பெற்றது. காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் எழுதிய கருத்துரையுடன் கூடியது. பக்கங்கள் 80. விலை ரூ. 1—25.

அன்னை பராசக்தியின் அருளைப் பெறுதற்குரிய தோத்திர நூல்களில் சிறந்ததொரு நூலாக விளங்குவது. தோத்திரம் சாத்திரம் என இரு பிரிவுகளை உடையது. தோத்திரப்பகுதியில் ஆசிரியர் சொற்சுவை பொருட்சுவை தோன்றப் பாடிய பாடல்கள் கற்பார்க்குப் பெருவிருந்தாய் அமைவன.

சாத்திரப் பகுதியில் அம்மையை வழிபடுவதற்குரிய யந்திரம் மந்திரம், யோகம் முதலிய நெறிகள் கூறப்படுகின்றன. இம்மை மறுமைப் பயன்களைக் கருதி புவனைவழிபாட்டுக்குரிய யந்திரங்கள் மந்திரங்கள் ஆகியவற்றை இப்பகுதியில் ஆசிரியர் கூறுகிறார்.

பாடற் பொருளை விளங்கிக் கொள்ளுதற்குக் கருத்துரை துணை செய்கிறது. நூலாசிரியர் பெயர் தெரிந்திலது.

கிடைக்குமிடம் :- செயலாளர், 'ஞானசம்பந்தம் பதிப்பகம்' தருமையாதீனம், மாயூரம் 609001, தஞ்சாவூர் மாவட்டம்.

திருச்செம்பொன்பள்ளி

(செம்பொனார்கோயில்)

திரு. என். இராமகிருஷ்ணா

இத்தலம் செம்பொன்னார்கோயில் என இக்காலத்தில் வழங்கப்படுகின்றது. விருத்திராசுரனைக் கொல்வதன் பொருட்டுப் பூசித்து வழிபட்டான் இந்திரன். அதனால் இந்திரபுரி எனப் பெயர்பெற்றது. முருகப்பெருமான் தாரகாசுரவதத்தின் பொருட்டுப் பூசித்தமையின் ஸ்கந்தபுரி எனவும் வழங்கும். அகஸ்தியர் வழிபட்டுப் புருஷார்த்தங்களைப் பெற்றார். பிரமன் பூசித்து படைப்புத் தொழில் கைவரப்பெற்றார். இரதி பூசித்துத் தன் பதியாகிய காமனை அடைந்தாள். நாககன்னியர் பூசித்து நல்ல கணவரை அடைந்தனர். இந்திரன் தக்ஷயாகத்தில் கலந்துகொண்ட குற்றத்திற்குப் பரிகாரம் பெற்ற தலமும் இதுவே. காவிரி, சமுத்திரம் முதலியனவும் வசிஷ்டர், திக்பாலகர்களும், பூசித்துப் பேறுபெற்றனர். விரபத்திரர் தக்ஷயாகத்திற்காக அவதரித்த தலமும் இதுவே. இத்தலத்திற்கு அருகில் ஒடும் காவிரியில் இட்ட எலும்புகள் பூமரங்களாய் இறைவனுக்குச் சாத்த பயன்பெறும். சமயாசாரியர்களுள் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் ஆகியோர் பாடிய திருப்பதிகங்களை யுடையது இத் திருத்தலம்.

சுவாமியின் பெயர் – சுவர்ணபுரீஸ்வரர். அம்மை பெயர் - சுகந்தவன நாயகி. (மருவார்குழலி) தலவிருட்சம் – வன்னி. தீர்த்தம் - இந்திர தீர்த்தம் காவிரி முதலியன. கிழக்குப் பார்த்த சந்நிதி. அம்மை தென்பக்கலில் மேற்கு முகமாக எழுந்தருளியிருக்கின்றார். கோச்செங்கட் சோழனின் திருப்பணியாகிய யானையேறாதபடிகளை யுடையதிருக்கோயில்; தென்புறமாக வழியுடையது.}

திருக்கருவறையில் உள்ள திருச்செம்பொன் பள்ளியார் கீழ் பதினாறு மேல்பதினாறு இதழ்களுடைய கமலமலர் போன்ற ஆவுடையாரில் சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். இம்மூர்த்தி திருமாலால் பூசிக்கப்பட்டவர். துவாரபாலகர்கள் சிறப்பாக உள்ளனர். பல உற்சவ மூர்த்திகள் உள்ளனர். பிக்ஷாடன மூர்த்தி மிகப் பழமையானதாகும். மகாமண்டபத்தில் பல உற்சவ மூர்த்திகள் உள்ளனர். தெற்குச் சுவரில் ஒர் துறவியுடனும் மந்திரியுடனும் நின்று வழிபடும் அரசர் உருவம் உள்ளது.

தேவியார்கோவில் மேற்கு நோக்கி உள்ளது. இத்தலத்தின் மேற்கே உள்ள பரியலூரில் தந்தையான தக்கன் செய்யும் வேள்விக்குச் செல்லும் கோலத்தில் அம்பிகை மேற்கு நோக்கி இருப்பதாகச் செவிவழிச் செய்தி கூறுகின்றது. சப்த கன்னியர் உருவங்கள் அழகாக உள்ளன. கோஷ்டங்களில் கணபதி, தக்ஷிணாமூர்த்தி, அர்த்தநாரீசர், துர்க்கை உருவங்கள் உள்ளன.

தல விருட்சம் வன்னி, வில்வம் ஆகியவையாகும். கோயிலின் தென்பக்கத்தில் உள்ள தீர்த்தம் சூர்ய தீர்த்தம். இப்புஷ்கரணியில் இந்திரன் அமிழ்ந்ததாகக்கூறும் கிணறு உள்ளது. காவிரியும் இத்தலத்துத்தீர்த்தமாகும். இதில் இடப்பட்ட எலும்புகள் பூமரங்களாகிப் பூக்கும். அப்பூக்களைக்கொண்டு முனிவர்கள் இறைவனை அர்ச்சித்தனராம்.

கோயிலின் வாயு மூலையில் ஜேஷ்டா தேவியின் கோயில் உள்ளது. கீர்த்தியை விரும்புவோர் வழிபடத்தக்க மூர்த்தி ஜேஷ்டா தேவி'' என்று கூறப்படுகின்றது. ஜேஷ்டாதேவி என்னும் இம்மூதேவி வெறுக்கத்தக்க தேவதை என நாட்டில் வழங்குவது தவறான கருத்தாகும்.

வீரபத்திரர் தோன்றிய தலம் என்று புராணங்கள் கூறுகின்றன. "கையார்சூலம் ஏந்தும் கடவுள்" என்று திருஞானசம்பந்தரும் "கைகொள்சூலத்தர்" என்று அப்பர் சுவாமிகளும் சேக்கிழார் பெருமான் "சூலக் கைத்தலப்படைவீரர்'' என்றும் கூறுவன இதை வலியுறுத்துகின்றன.

கல்வெட்டுக்கள் :

கோவிலில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. ஜேஷ்டாதேவி உருவம்இருப்பதால் இக்கோவில் கி. பி. 879 – 907 வரை ஆண்ட இராஜகேசரிவர்மன் முதலாம் ஆதித்த சோழன் காலத்துக் கோயில் எனக் கொள்ளலாம். முக்கியமாக 6-கல்வெட்டுக்கள் இத்தலத்தின் சிறப்பினைக் கூறுகின்றன.

திருப்பணி :

1959-ல் இக்கோவில் திருப்பணி செய்யப்பட்டுகும்பாபிஷேகம் நிகழ்த்தப்பெற்றது. சமீபத்தில் மற்றொருதிருப்பணி துவக்கப்பட்டுள்ளது. தருமைஆதீனம் ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம்அவர்கள் அத்திருப்பணியைத் தொடங்கிவைத்து 1001—00 அருட்கொடை வழங்கியுள்ளார்கள்.

உற்சவங்கள் :

சித்திரை மாதத்தில் 12 நாட்கள் கதிரவனின் கிரணங்கள் மூலத்தான மூர்த்தியின் மீது படுவதால் விசேஷ பூஜைகள் நடைபெறுகின்றன. தேர்விழாவும் கொண்டாடப்படும். சௌர மகோற்சவம் என்பது இவ்வுற்சவத்தின் பெயர்.

இத்தலம் தஞ்சை மாவட்டத்தில் மாயூரம் – தரங்கம்பாடி செல்லும் பாதையில் உள்ளது. இருப்புப்பாதையும் உண்டு. காவிரிக்கரையில் அமைந்துள்ள பாடல்பெற்ற தலங்களில் இது 42-வது திருத்தலம்.

ஸ்ரீ சுவர்ணபுரீசுவரர் தேவஸ்தானத்தில் மணிவாசகமன்றம் நடைபெறுகின்றது. இதன் சார்பில் அவ்வப்போது சமயச் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. இத்தலம்பற்றி வட மொழியில் "ஸ்வர்ண ஸ்தல மஹாத்மியம்" என்னும் நூல் உள்ளது.

இத்தலத்தின் சுற்றிலுமுள்ள சிறப்பு மிக்க தலங்களாவன – திருமயிலாடுதுறை, திருவிளநகர், திருப்பறியலூர், திருவாக்கூர், திருநனிபள்ளி, திருக்கடைமுடி, திருவெண்காடு, திருக்கடவூர், திருவிடைக்கழி. இத்தலம் பற்றிய வரலாறு பூம்புகார் சிவராஜ யோகமடம் சிவத்திரு மாணிக்கவாசக ஞான தேசிக சுவாமிகள் அவர்களால் எழுதப்பட்டுள்ளது.

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanatheeswaraswamy Devasthanam, Thiruvaiyaru.

I came from North India. For me, it was really the most attractive building. I was wonder-struck to see very very old construction being maintained so wonderfully and then every small structure has a history behind it. Not only Tamilians but the whole India is proud of it:

(Sd.) KULBIR SINGH,
Deputy Supdt. of Police,
Central Reserve Police.

20—3—76.

தேவார வைப்புத் தலங்கள்

திருநாவுக்கரசர்

(மலர் 35. இதழ் 3. பக்கம் 133 - இன் தொடர்ச்சி)

[எண்கள் முறையே, திருமுறை-பதிகம்-பாடல்களைக் குறிப்பன.]

	தலம்	பதிக எண்	இருப்பிடம்
101	தேவிச்சுரம்	6-7-5	இன்ன தலமெனப்புலனாகவில்லை. 'தென்னூர் தேவிச்சுரம்' என்பர் அப்பர் பெருமான்.
102	தேனூர்	6-41-9	திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள தலமென்பர். பாண்டி நாட்டில் ஒரு தேனூர் இருப்பதாக ஐங்குறு நூற்றில் குறிப்புள்ளது.
103	தோமூர்	6-70-5 6-71-4	இராசேந்திர சிங்க வளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்துத் தோமூர் எனக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.
104	நந்திகேச்சுரம்	6-71-8	மைசூர் நாட்டு 'நந்தீச்சுரம்' என்றும், செங்கற்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரிபுகைவண்டி நிலையத்தை அடுத்த 'நந்திவரம்' என்றும், குடந்தையை அடுத்த 'நந்திவனம்' என்றும் அறிஞர்கள் பலவாறு கூறுவர்.
105	நல்லக்குடி	6-71-1	மாயூரத்திற்கு அருகிலுள்ள நல்லத்துக்குடி என்பர். டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை.
106	நல்லாற்றூர்	6-71-4	புதுவை மாநிலம் கண்டமங்கலம் அருகில்உள்ளசிற்றூர் என்பர் திரு. செங்கல்வராய பிள்ளை. தஞ்சை நரசிங்கன்பேட்டையை அடுத்த நல்லாற்றூர் நாட்டின் தலைநகராதலே பொருத்தம் என்பர் திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர் திரு. க. வெள்ளைவாரணனார்.

	தலம்	பதிக எண்	இருப்பிடம்
107	நாகளேச்சரம்	6-71-8	சீகாழியிலுள்ள நாகேச்சரம் என்பர் திரு. செங்கல்வராயப் பிள்ளை. நன்னிலத்தை அடுத்த குழிக்கரையிலுள்ள சிவாலயம் 'நங்காளீச்சுரம்' என வழங்கப்படுகிறது.
108	நாலாறு	6-71-10	விளங்கவில்லை.
109	நியமநல்லூர்	6-70-5	விளங்கவில்லை. நியமம், நல்லூர் என வேறு பிரித்து நோக்க இடமுண்டு.
	நியமம்	6-13-4	தஞ்சை- திருக்காட்டுப்பள்ளியை அடுத்த நேமம் என வழங்கும் ஊராகலாம்.
110	நீலமலை	6-71-9	நீலகிரிமலையாதல்கூடும். விளங்கவில்லை.
111	நெடுவாயில்	6-71-4	விளங்கவில்லை. தஞ்சை மாவட்டத்தில் நெடுவாசல் என்ற ஓர் சிற்றூர் உண்டு.
112	நெய்தல் வாயில்	6-71-7	காவிரிப்பூம்பட்டினத்தை அடுத்த நெய்தல்வாசல் என்னும் சிற்றூர்.
113	பஞ்சாக்கை	6-70-8	திருக்கடவூருக்கு அருகிலுள்ள சிற்றூர்.
114	(ஆன்) பட்டி	6-7-10	கோவை, திருப்பேரூர்க் கல்வெட்டு திருவான்பட்டி என்ற ஒரு ஊரைக் குறிக்கிறது.
115	பரப்பள்ளி	6-71-1	கோவை மாவட்டம் தாராபுரத்தை அடுத்த பரஞ்சேர் பள்ளி என்னும் சிற்றூர்.
116	பவ்வந்திரியும் -பருப்பதம்	6-7-6	கடலருகே அமைந்த மலைத்தலமாகலாம் 'திருப்பருப்பதம்' என்ற பாடல் பெற்ற தலமாகவும் கொள்ள இடமுண்டு.
117	பழையாறு	6-13-1	குடந்தையை அடுத்த பழையாறை என்ற சோழர் தலைநகரம்.
	பனங்காடு	6-71-6	திருப்புறவார் 'பனங்காடு' என்னும் பாடல் பெற்ற தலம்.

	தலம்	பதிக எண்	இருப்பிடம்
	பனங்காட்டூர்	6-70-7	வன்பார்த்தான் பனங்காட்டூர் என்னும் பாடல்பெற்ற தலம்.
	பாதாளம்	6-70-7	பாதாளீச்சுரம் என்னும் பாடல் பெற்ற தலம்.
118	பாவநாசம்	6-7-6	பொதிய மலையை அடுத்த பாவநாசமாதல் வேண்டும்.
119	பாற்குளம்	6-13-1	பழையாற்றில் உள்ள ஒரு தீர்த்தக்குளம்என்பர் திரு. பண்டாரத்தார்.
120	பிடவூர்	6-7-6 6-70-2	திருச்சி – துறையூரை அடுத்த சிற்றூர்என்பர் திரு செங்கல்வராயபிள்ளைதஞ்சை திருவிடைக்கழிக்கு அருகில் உள்ளதென்பர் திரு. பண்டாரத்தார்.
121	பிரம்பில்	6-70-6	தஞ்சையை அடுத்த கள்ளப்பிரம்பூர். மாயூரம் திருவாரூர் தடத்தில் மங்கைநல்லூரை அடுத்த பிரம்பூர் என்பர் திரு. செங்கல்வராய பிள்ளை.
122	பிறையனூர்	6-31-3	விளங்கவில்லை.
123	புதுக்குடி	6-71-3	உய்யக்கொண்டான் வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டுப் புதுக்குடி என்று கல்வெட்டுக் குறிக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் இப்பெயரில் பல சிற்றூர்கள் உண்டு.
124	புரிச்சந்திரம்	6-51-9	விளங்கவில்லை.
125	புலிவலம்	6-51-11	திருவாரூருக்குத் தெற்கே இரண்டு கல்தொலைவில் உள்ளது. தற்போது சிறந்த வைஷ்ணவத்தலமாக விளங்குவது. தொண்டை நாட்டுத் திருப்புலிவலம் என்பர். திரு. ரா. பி. சே.

ஆதாரம் :- பன்னிரு திருமுறை வரலாறு - முதற்பாகம்.

தகவல் :- இரா. செல்வக்கணபதி.

திருப்புள்ளிருக்குவேளூர்த் தலச் சிறப்பு

தென்னாட்டில் புகழ்பெற்ற பிரார்த்தனைத் தலங்களில் ஒன்று புள்ளிருக்கு வேளூர். இறைவன் தன்னை அன்போடு வழிபடும் அடியார்களுடைய உடல் நோய்களையேயன்றி உயிர் நோயாகிய பிறவிப் பெரும்பிணியையும் தீர்த்தருள வைத்தியநாதர் என்னும் திருப்பெயர் தாங்கி எழுந்தருளி விளங்கும் தலம் இது. முருகப் பெருமான் ஆனேறுயர்த்திட்ட ஐயனுக்கும் அம்மைக்கும் அரு மருந்தாய் - செல்வமுத்துக்குமாரராய் விளங்குகின்றார்.

இத்தலம் சோழவள நாட்டில் தஞ்சைமாவட்டத்தில் சீகாழிக் கருகில் உள்ளது. காவிரி வடகரைத் தலங்களில் 16-ஆவது தலம். தென் இந்திய இருப்புப் பாதையில் வைத்தீசுவரன் கோயில் என்னும் பெயருடன் புகைவண்டி நிலயமாகவும் அமைந் துள்ளது. தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான இருபத்தேழு திருக்கோயில்களுள் ஒன்றாய்த் திகழ்கிறது.

தலப்பெயர் :

புள் (ஜடாயு) இருக்கு (இருக்குவேதம்) வேள் (முருகன்) ஊர் (சூரியன்) இந் நால்வரும் பூசித்தமையால் புள்ளிருக்கு வேளூர் எனவும் சடாயுபுரி, வேதபுரி, கந்தபுரி, பரிதிபுரி எனவும் அங்காரகன் பூசித்தமையால் அங்காரகபுரம் அம்பிகை பூசித்த மையால் அம்பிகாபுரம் எனவும் இவையன்றி வினை தீர்த்தான் கோயில் வைத்தீசுவரன்கோயில் எனவும் வழங்கப்படுகிறது.

கோயிலமைப்பு :

நான்கு கோபுரங்களோடு சிறந்து திகழும் இக்கோயில் மேற்கு நோக்கிய சந்நிதி உடையது. அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கி உள்ளது. ஆலயத்தின் காவல் தெய்வங்களைப்பற்றிக் கீழ்வரும் பாடலால் உணரலாம்.

“ தெற்கில் கணேசன் திகழ்மேற்கில் பைரவனும்
தொக்க வடக்கில் தொடர்காளி — மிக்ககிழக்(கு)
உள்ளிருக்கும் வீரனையும் உற்றுப் பணிந்துய்ந்தோம்
புள்ளிருக்கு வேளூரிற்போய் ”

கோயில் இராஜகோபுரங்கள் விமானங்கள் மண்டபங்கள் அனைத்தும் நன்கு திருப்பணிகள் செய்யப்பெற்று 2—7—1969 ல் மகாகும்பாபிஷேகம் நிகழ்த்தப்பெற்றுள்ளது. கோயிலுக்குள் விளங்கும் சித்தாமிர்தத் தீர்த்தம் மிக்க பெருமை உடையது

நாற்புறமும் மண்டபங்கள், படிக் கட்டுக்களுடனும் நடுவில் நீராழி மண்டபத்துடனும் விளங்குகின்றது.

மூர்த்திகள் :

சுவாமி பெயர் ஸ்ரீ வைத்திய நாதர். அம்பாள் பெயர் ஸ்ரீ தையல்நாயகி. முருகன் திருப்பெயர் :- ஸ்ரீ செல்வமுத்துக் குமாரர். குமரகுருபர அடிகளுக்குப் "பொன்பூத்தகுடுமி" என அடியெடுத்துக் கொடுத்துப் பிள்ளைத்தமிழ் பாடும்படிசெய்த பெருமான் இவர். கோளிலித்தலம்; நவக்கிரகங்கள் இத்தலத்தில் வக்கிரமில்லாமல் வரிசையாக அமைந்துள்ளன. அங்காரகனின் செங்குட்ட நோயைப் போக்கியதால் இது அங்காரகத் தலமாகவும் விளங்குகிறது. அங்காரகனுக்கு மூலவிக்ரகமும் உற்சவவிக்ரகமும் இங்கு உள்ளன.

தலப் பெருமை :

முருகன் சூரபன்மனை ஒடுக்க வேல்வாங்கியதலம். இறைவன் 4448 நோய்களைத் தீர்க்கத் திருவுளங்கொண்டு தையல்நாயகி அம்மை தைல பாத்திரமும் சஞ்சீவியும் வில்வமரத்தடி மண்ணும் கொண்டு உடன்வர பெருமான் வைத்தியநாதராய் எழுந்தருளி விளங்கும் தலம்.

நேத்திரப்பிடி சந்தனம் :

ஸ்ரீ செல்வமுத்துக்குமாரருக்கு அர்த்தயாமபூஜையில் சாத்தப் படுவது. அணிபவர்கட்கு வேண்டிய பயன்களைத்தரவல்லது.

சடாயு குண்டம் :

இராமபிரான், ஜடாயுவின் வேண்டுகோட்படி சிதையடுக்கி ஜடாயுவின் உடலைத் தகனம் செய்த இடம். சிவபுராணத்தைப் பராமுகமாகக்கேட்ட வீரசேனனின் மகனுக்கு ஏற்பட்ட க்ஷய ரோகம் இத்தலத்தில் நீராடி ஜடாயு குண்டத்தில் உள்ள திருநீற்றை அணிந்துவந்ததால் நீங்கியது என்பது தல புராணம். இன்றும் இக்குண்டத்தில் உள்ள நீற்றினை அணிந்து நோய் நீங்கப்பெறுவோர் பலர்.

திருச்சாந்துருண்டை :

ஸ்ரீ வைத்தியநாதப்பெருமானின் பிரசாதமாக நோய் நீங்கப் பெறுதற்பொருட்டு அளிக்கப்பெறுவது. சுக்கிலபக்ஷத்து நல் நாழிகையில் அங்கசந்தான தீர்த்தத்தில் நீராடி மண் எடுத்து வந்து ஆலயத்தில் விபூதிகுண்டத்திலுள்ள விபூதியையும் சித்தாமிர்தகீர்த்த நீரையும் சேர்த்துக் குழைத்து ஐந்தெழுத்தோதிக் கொண்டே முத்துக்குமாரர் சந்நிதியில் உள்ள குழியம்மியில்

அரைத்து உளுந்தளவாக உருட்டி அம்பாள் திருவடியில்வைத்து அர்ச்சித்து எடுத்துச் சேகரித்து வைத்துக்கொண்டு தேவையான வர்கள் கேட்கும்போது அவை கொடுத்துதவப்படுகின்றன. இம் மாத்திரையை உட்கொண்டு நோய்நீங்கி நலம் பெற்றோர் பலராவர்.

தீர்த்தம் :

கோயிலுக்குள் உள்ள சித்தாமிர்ததீர்த்தம்; எல்லாத்தீர்த்தங் களிலும் முதன்மையானது. கோக்ஷீர தீர்த்தம், இக்ஷுசார தீர்த்தம், ஜடாயு தீர்த்தம் முதலிய மறுபெயர்களை உடையது.

இத்தீர்த்தச் சிறப்பினைக் குமரகுருபரர் 'சித்தாமிர்தத் தீர்த்தக் குறுந்திவலை ஒன்றே பலநோய்களையும் போக்கவல்லது' என்று பாடுகிறார். மற்றும் இத்தலத்தில் கோதண்ட தீர்த்தம், கௌதம தீர்த்தம், வில்வ தீர்த்தம், முனிவர் தீர்த்தம், அங்க சந்தான தீர்த்தம் முதலிய தீர்த்தங்கள் உள்ளன.

தல விருட்சம் :

வேம்பு, கீழைக்கோபுர வாசலில் உள்ளது. பழமை வாய்ந் தது. இத்தலம் கிரேதாயுகத்தில் – கதம்ப வனம், திரேதா யுகத்தில் – வில்வவனம், துவாபரயுகத்தில் – வகுளவனம், கலி யுகத்தில் – நிம்பவனம் என்று பெயர் பெற்று விளங்குகிறது. நிம்பம் – வேம்பு.

வழிபட்டோர் :

சடாயு, வேதம், முருகன், ஆதித்தன், அங்காரகன், பிரமன், சதானந்தர், இராமர், கலைமகள், பூமகள், துர்க்கை, சிவசன்மன், துர்வாசன், பராசரர் முதலியோர் வழிபட்டுப் பல பேறுகளையும் பெற்றுள்ளனர்.

திருவிழாக்கள் :

காமிகாகம முறைப்படி நாடோறும் ஆறுகால பூசைகள் நடைபெறுகின்றன. பங்குனியில் பிரமோற்சவமும் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரருக்குத் தைச் செவ்வாயில் திருவிழாவும் நிகழ் கின்றன.

மாதந்தோறும் வரும் கார்த்திகை விழா இங்கு மிகவும் சிறப் புடையது. இந்நாளில் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரருக்கு நடை பெறும், அபிஷேக ஆராதனைகளைத் தரிசிக்கப் பல்லாயிரவர் பல பகுதிகளிலிருந்தும் வருவர். ஸ்ரீ செல்வமுத்துக்குமாரருக்கு

நடைபெறும் அபிஷேகங்களில் சந்தனாபிஷேகம் மிக்க சிறப்புடையது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அன்பர்கள் புடைசூழ எழுந்தருளியிருந்து வழிபடுவது கண்கொள்ளாக் காட்சியாகத் திகழும். இப்பெருமானுக்கு நடைபெறும் அர்த்தயாமம் வழிபாட்டுக்குப் புழுகாப்பு என்று பெயர். அங்காரக க்ஷேத்திரம் ஆகையால் செவ்வாய்க்கிழமைகளில் அங்காரகர் பிராகாரத்தில் வலம் வருவார். மற்றும் கந்தசஷ்டி நவராத்திரி ஆடிப்பூர விழாக்களும் சிறப்புற நிகழ்கின்றன.

திருமுறைப் பாடல்கள் :

திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் திருப்பதிகங்கள் இரண்டும் ஆக 3 திருப்பதிகங்கள் உள்ளன. அருணகிரிநாதர் திருப்புகழும் தருமை ஆதீனம் 10-வது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளிய செல்வமுத்துக்குமாரசாமி திருவருட்பாவும் குமரகுருபரர் அருளிய முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழும் உள்ளன. வடுகநாத தேசிகர் இயற்றிய தலபுராணமும் படிக்காசு முனிவர் அருளிய புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகமும் உள்ளன. மற்றும் சிதம்பர முனிவர், காளமேகப்புலவர் இராமலிங்க சுவாமிகள் உலகநாத முனிவர் முதலியோர் வழிபட்டுள்ளனர். ஸ்ரீமத் அட்சயலிங்கத்தம்பிரான் சுவாமிகள் ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் இவர்கள் இத்திருக்கோயிலுக்குச் செய்த திருப்பணிகள் குறிப்பிடத்தக்கன. இன்றும் இவர்களுக்கு மாகேசுவரபூசை ஆண்டுதோறும் திருக்கோயில் சார்பில் கொண்டாடப்படுகிறது.

கல்வெட்டுக்கள் :

இத்தலத்தில் உள்ள கல்வெட்டுக்கள் எட்டு. விக்கிரமசோழன் வீரராசேந்திரபாண்டியன் கல்வெட்டுக்களோடு பிறகல்வெட்டுக்களும் உள்ளன. அவற்றில் தஞ்சை மன்னனாகிய அச்சுதப்ப நாயக்கன் காலத்தது ஒன்றும் துளசா மன்னனுடையன இரண்டும் விக்கிரம சோழனுடையது ஒன்றும் சக்கோலதேவ மகாராசாவினுடையது ஒன்றும் பெயர், காலம் தெரியாதவை மூன்றும் ஆக எட்டுக் கல்வெட்டுக்கள் உள்ளன. வேளூர்க் கோயிலுக்கு இறையிலி நிலங்கள் பல அளிக்கப்பட்டதும் திருப்பணிகள் செய்விக்கப் பெற்றதும் இவற்றில் குறிக்கப்பட்டுள்ளன.

செய்திகள்

ஸ்ரீ வனதுர்க்காதேவி ஆலயத்தில் வசந்த நவராத்திரி விழா

தருமையாதீனம் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் எழுந்தருளி அருள் வழங்கும் ஸ்ரீ வனதுர்க்காதேவி ஆலயத்தில் 31—3—76 முதல் 8—4—76 முடிய வசந்த நவராத்திரிவிழா நடைபெற்றது. உலக நலனை முன்னிட்டு ஸ்ரீ வனதுர்க்காதேவிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நவசக்தி அருச்சனையாக லட்சார்ச்சனையும், சந்நிதியில் தேவிமாகாத்மிய பாராயணம், அபிராமி அந்தாதி பாராயணம் முதலியனவும் நடைபெற்றன. 8—4—76 வியாழக்கிழமை அன்று லட்சார்ச்சனை நிறைவு பெற்றது.

நாள்தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினர்கள். அன்பர்பலர் நாள்தோறும்வந்து தேவியைத் தரிசித்து அருள் பெற்றனர்.

வேளூர்த் திருக்கோயிலில் பிரமோற்சவம்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் தேவஸ்தானத்தில் ஸ்ரீ வாலாம்பிகை உடனுகிய ஸ்ரீ வைத்தியநாதப் பெருமானுக்குப் பங்குனித்திங்கட் பெருவிழா 7—3—76 ஞாயிறன்று தொடங்கிப் பத்து நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. நாள்தோறும் காலை மாலை இருவேளைகளிலும் நாதசுர இன்னிசை முதலியவற்றுடன் திருவீதியுலா நிகழ்ந்தது. 7—3—76 அன்று துவஜாரோகணமும், 11—3—76 அன்று சகோபுரத்தில் இடப வாகனக் காட்சியும், 13—3—76 அன்று திருத்தேர்த் திருவிழாவும், 16—3—76 அன்று சித்தாமிர்தத் தீர்த்தத்தில் தீர்த்தங்கொடுத்தருளலும், கொடியிறக்கமும் நடைபெற்றன.

9—3—76 செவ்வாய்க்கிழமையன்று மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், தருமை ஆதீனத் தமிழ்ப்புலவர் டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ. பிஎச். டி., அவர்கள் 'காழிப்பிள்ளையார் கனிமொழி' பற்றி உரை நிகழ்த்தினர். 10—3—76 அன்று திருமுறை விழாவும் தேவார வகுப்பு

ஆண்டு விழாவும் நிகழ்ந்தன. அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித்துறைப் பேராசிரியர் தருமை ஆதீனத்தமிழ்ப்புலவர் மகாவித்துவான், திரு. ச. தண்டபாணிதேசிகர் 'திருவாரூராளி யார் தேன்தமிழ்' பற்றி உரையாற்றி, தேவார வகுப்பு மாணவர் கட்குப் பரிசுகள் வழங்கினார்கள். பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்தொடு யானைமேல் திருமுறைகள் திரு வீதியுலா நிகழ்வுற்றது

11—3—76 அன்று தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியை வித்துவான். திருமதி. ப. நீலா, பி.ஏ., அவர்கள் 'நாவலூர் நம்பி நன்மொழி' பற்றி உரையாற்றினார் கள். 12—3—76 அன்று தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர், தருமையாதீனத் தமிழ்ப் புலவர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் 'திருவாதவூரர் இன்தமிழ்' பற்றி உரையாற்றினர். அன்பர்கள் பலர் வழிபட்டும், சொற் பொழிவு நிகழ்ச்சிகளுக்கு வந்திருந்து கேட்டும் பயனுற்றனர்.

திருபுவனத்தில் உருத்திரபாதத் திருநாள்

தருமையாதீனத்திற்குச்சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பக ரேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 7—3—76 முதல் 16—3—76 முடிய உருத்திரபாதத் திருநாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. 7—3—76 அன்று துவஜாரோகணமும், 11—3—76 அன்று சகோபுரத்தில் இடபவாகனக் காட்சியும், 13—3—76 அன்று திருக்கல்யாணத் திருவிழாவும், 15—3—76 அன்று திருத் தேர்த் திருவிழாவும், 16—3—76 அன்று தீர்த்தத் திருவிழாவும், கொடியிறக்கமும் நடைபெற்றன.

9—3—76 அன்று தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், புலவர். திரு. இரா.செல்வக்கணபதி பி.ஏ., அவர்கள் 'திருநீலகண்டர்' என்னும் பொருள் பற்றியும், 10—3—76 புதன் கிழமை திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான், திரு. வே. பசுபதி அவர்கள் 'காரைக் காலம்மையார்' என்னும் பொருள் பற்றியும் உரையாற்றினர். 11—3—76 வியாழக்கிழமை திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நடைபெற்றது. திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர், தருமையாதீனத் தமிழ்ப் புலவர், வித்துவான். திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ., அவர்கள் 'திரு ஞானசம்பந்தர்' என்னும் பொருளில் உரையாற்றி தேவார வகுப்பு மாணவர்கட்குப் பரிசுகள் வழங்கினார்கள். பண்ணிசை

வாணர்களின் திருமுறைப் பாராயணத்தொடு யானைமேல் திருமுறைகள் திருவீதியுலா நிகழ்வுற்றது. 12—3—76 அன்று தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சிரோமணி. வித்துவான். திரு. வி. சபேசன் அவர்கள் 'கண்ணப்பர்' என்னும் பொருள் பற்றி உரையாற்றினர். அன்பர்கள் பலர் வந்திருந்து தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுற்றனர்.

ஸ்ரீ சரபேசுவரர் உற்சவம் :

திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 21—3—76 ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீ சரபேசுவரர் உற்சவம், விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நிகழ்ந்தது. அன்று காலையில் உலக நலங்கருதி ஏகதின லட்சார்ச்சனை தொடங்கி இரவில் நிறைவுசெய்யப்பெற்றது. இரவு மின்விளக்குகளால் ஒப்பனை செய்யப்பெற்ற வெள்ளி ரதத்தில் ஸ்ரீ சரபேசுவரர் திருவீதியுலா நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினார்கள். பக்தர்கள் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

திருவையாறு திருக்கோயிலில் நந்தியெம்பெருமான் திருக்கல்யாண விழா

சிலாத முனிவரின் புதல்வராய் இத்தலத்தில் அவதரித்துத் தவமியற்றிய நந்திதேவருக்கு இறைவன் கங்கைநீர் முதலிய ஐந்துவகை நீராலும் அபிஷேகம் பண்ணிவைத்து, தீக்ஷை செய்து, திருமழபாடிக்கு எழுந்தருளி, வசிஷ்டமகரிஷியின் மகள் சுயசாம்பிகையைத் திருமணம் செய்வித்தருளிப் பஞ்ச பூதப் பிரதட்சணமாகத் திருவையாற்றுக்குப் போந்தருளும் திருவிழா 7—4—76 புதன்கிழமையன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. அன்பர்கள் பலரும் வந்திருந்து நந்தியெம்பெருமான் திருக்கல்யாணப் பெருவிழாவைத் தரிசித்து இன்புற்றனர்.

பேரளம், உருத்திரபாதத் தீர்த்தத் திருநாள்

தருமையாதீனத்திற்குச்சொந்தமான பேரளம்ஸ்ரீசுயம்புநாத சுவாமி திருக்கோயிலில் 16—3—76 செவ்வாய்க்கிழமை பங்குனி உத்திரத் திருநாளன்று உருத்திரபாதத் தீர்த்தத் திருநாள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாலை 6 மணிக்குத் தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் புலவர் திரு. கா. ம. கண்ணப்பன் 'சிறுத்தொண்டர்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினர். திருமுறைப் பாராயணமும் இரவு

பஞ்சமூர்த்திகள் திருவீதியுலாவும் நிகழ்ந்தன. அன்பர்கள் பலர் இறைவனைத் தரிசித்தும், சொற்பொழிவினைக் கேட்டும் பயனுற்றனர்.

சித்திரைத் திங்கட் பெருவிழா

திருக்கடவூரில்:

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்பாள் உடனுய ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத் திங்கட் பெருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. 5—4—76 அன்று கொடியேற்றமும் 7—4—76 அன்று திருக்கல்யாணமும், 9—4—76 அன்று சகோபுரக் காட்சியும், 10—4—76 அன்று காலசம்காரமும் நடைபெற்றன. 12—4—76 அன்று திருத்தேர்த் திருவிழாவும், 14—4—76 அன்று தீர்த்தம் கொடுத்தருளும் காட்சியும் நிகழும்.

விழா நாட்களில் சமயச் சொற்பொழிகள் நடைபெற்றன. 6—4—76 செவ்வாய்க்கிழமையன்று வித்துவான், திரு. மு. சுந்தரேசம்பிள்ளை, 7—4—76 அன்று மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார், 8—4—76 அன்று தருமை ஆதீனப்புலவர், திரு. கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ., திருவதிகை திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியார் ஆகியோர் முறையே 'ஞானத்தமிழ்' 'அப்பர் அருந்தமிழ்' 'சுந்தரர் செந்தமிழ்' 'சேக்கிழார் செந்தமிழ்' என்ற தலைப்புக்களில் விரிவுரையாற்றினர்.

திருமுறை விழாவும், தேவார வகுப்பு ஆண்டு விழாவும் 9—4—76 வெள்ளிக்கிழமை நிகழ்ந்தது. தருமையாதீனப் புலவர், திரு ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் 'மாணிக்கவாசகர் மணிமொழி' என்ற தலைப்பில் உரையாற்றி, தேவார வகுப்பு மாணவர்கட்குப் பரிசுகள் வழங்கினர்கள். பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்தொடு, யானைமேல் திருமுறைகள் திருவீதியுலா நிகழ்வுற்றது. 10—4—76 அன்று காலசம்காரத் திருநாள் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காலசம்காரத் தரிசனத்திற்கு எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். காலசம்காரத்தின்போது திருச்சிராப்பள்ளி புலவர். திரு. இலஞ்சி முத்துக்குமாரசாமி அவர்கள் 'அட்டவீரட்டம்' பற்றி உரையாற்றினர். காலசம்காரக் காட்சி வழிபாட்டிற்குப்பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினர்கள். விழாக் காலங்களில் பக்தர்கள் வந்து வழிபட்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயனுற்றனர்.

சீகாழியில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமை யாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரை திங்கட் பெருவிழா சிறப்புற நிகழ்ந்து வருகின்றது. 5—4—76 அன்று கொடியேற்றமும், 6—4—76 அன்று திருமுலைப்பால் திருவிழாவும் 9—4—76 அன்று சகோரபுர தரிசனமும் 10—4—76 அன்று திருக்கல்யாணமும் நிகழ்வுற்றன. 12—4—76 அன்று திருத்தேர்ப் பெருவிழாவும் 14—4—76 அன்று தீர்த்தத் திருநாளும் நிகழ உள்ளன. விழாநாட்களில் சிறந்த நாதசுர இன்னிசை முதலியவற்றுடன் திருவீதியுலாவும் பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணமும் நிகழ்ந்தன.

திருமுலைப்பால்திருவிழாவன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். திருஞானசம்பந்தர் சிவிகையில் எழுந்தருளி யானதும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பக்தர்களுக்கு ஆசியருளினர்கள். பின்னர் மாயூரம் கோட்டாட்சித் தலைவர் திரு. இரா. வீரராஜு அவர்கள் அற்புத விளக்க விரிவுரையைத் தொடக்கி வைத்தார்கள். தொடர்ந்து, வித்துவான். ஸ்ரீமத் இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகளும் மற்றும் பல அறிஞர் பெருமக்களும் ஞானசம்பந்தர் அற்புத விளக்க விரிவுரையாற்றினர்.

திருஞானசம்பந்தர் பிரமதீர்த்தக் கரைக்கு எழுந்தருளி யானதும், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், பழம்பெரும் ஓதுவாமூர்த்திகளாகிய திருவாரூர் திரு. ஆர். கணேசம் பிள்ளை அவர்களுக்கு, ‘திருமுறை கலாநிதி’ என்னும் பட்டம் பொறிக்கப்பட்ட பொற்பதக்கமும் 1001 ரூபாய்கொண்ட பண முடிப்பும் வழங்கி, ஆசிக்கவசமாகப் பொன்னுடைபோர்த்தி யருளினர்கள்.

தோணியப்பர் ஸ்ரீ உமாதேவியாரோடு பிரம தீர்த்தக் கரைக்கு எழுந்தருளி, திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு ஞானப்பால் வழங்கும் காட்சி நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பெருமக்களுக்கும் பக்தர்களுக்கும் திருமுலைப்பால் விழாப் பிரசாதம் வழங்கியருளினர்கள்.

திருமுலைப்பால் திருவிழாவன்று மாலை திருமுறைக் கருத்தரங்கம் நிகழ்வுற்றது. தருமை ஆதீனப் புலவர், திரு. சி. அருணை வடிவேல்முதலியார் அவர்கள் தலைமையேற்று ‘புராண ஆசிரியர்கள் கண்ட சம்பந்தர்’ என்னும் பொருளில் உரையாற்றினர்கள். சென்னை ‘திருக்கோயில்’ ஆசிரியர், தருமை ஆதீனப் புலவர் திரு. என். ஆர். முருகவேள் அவர்கள் ‘அப்பர்கண்ட சம்பந்தர்’ என்னும் பொருளில் விரிவுரையாற்றினர்கள்.

7—4—76 அன்று 'சமணர் கழுவேற்றம் திருஞானசம்பந்தர் பெருமைக்கு உகந்தது அன்று' என்னும் பொருளில் வழக்காடு மன்றம் நிகழ்வுற்றது. திருக்குறளார் திரு. வீ. முனுசாமி பி. ஏ., பி. எல்., அவர்கள் நடுவராக இருந்தார்கள். கழுவேற்றம் சம்பந்தர் பெருமைக்கு உகந்தது அன்று என்று புலவர் திரு. கோ. சாரங்கபாணி அவர்கள் வழக்குத் தொடுக்க, பெருமைக்கு உகந்ததே என்று புலவர் திரு. செல்வக்கணபதி பி. ஏ. அவர்கள் எதிர் வழக்காடினர்.

8—4—76 அன்று திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டுவிழாவும் தருமை ஆதீனப் புலவர் பாலகவி வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியார் தலைமையில் நிகழ்ந்தது. தருமை ஆதீனப்புலவர் திரு. க. வெள்ளைவாரணனர் அவர்கள் 'திருமுறைப்பயன்பற்றி உரையாற்றினர்கள். தேவார வகுப்பு மாணவர்கட்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பண்ணிசை வாணர் களின் திருமுறைப் பாராயணத்தொடு திருமுறைகள் யானைமேல் திருவீதியுலாக் காட்சி நிகழ்வுற்றது.

9—4—76 அன்று 'ஞானசம்பந்தர் வாழ்வியல் அற்புதங்கள்' என்னும் பொருளில் கவியரங்கம் நிகழ்வுற்றது. தருமையாதீனப் புலவர், டாக்டர், திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ. பி. எச். டி., அவர்கள் தலைமைக் கவி படைக்க, வித்துவான். திரு. மா. வே. பசுபதி அவர்கள் "ஞானப்பால் உண்டது" பற்றியும், கவிஞர், திரு. மா. வரதராசன் பி. ஏ., 'படிக்காசு பெற்றது' பற்றியும் திரு. மனம். சேர. சந்திரகாசன், எம். ஏ., பி. டி., அவர்கள் 'வாதில் வென்றது' பற்றியும், கவிஞர், திரு. மு. க. சங்கரன் 'விடம் தீர்த்தது' பற்றியும் திரு. அ. கலியபெருமாள் எம். ஏ., அவர்கள் 'பூம்பாவையை எழுப்பியது' பற்றியும் தம் இனிய கவிதைகளைப் படித்தனர்.

10—4—76 அன்று "பல்லவ மன்னன் அப்பர் பெருமானுக்கு வழங்கியதண்டனைகள் செங்கோன்மையா? கொடுங்கோன்மையா? என்னும் பொருளில் பட்டிமண்டபம் நிகழ்வுற்றது. மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. தி. வ. காந்திமதி நாதன் எம். ஏ., அவர்கள் நடுவராக அமர்ந்தார். 'செங்கோன் மையே' என்னும் கட்சியில் திரு. அ. அறிவொளி, எம். ஏ., திருமதி. ப. நீலா பி. ஏ., புலவர், திரு. கா. ம. கண்ணப்பன் ஆகியோர் வாதிட்டனர். கொடுங்கோன்மையே என்னும்கட்சியில் புலவர். திரு. இரா. செல்வக்கணபதி பி. ஏ., திருமதி. துரை. வள்ளி, பி. ஏ., திரு. ஆ. செகந்நாதன், எம். ஏ. ஆகியோர் வாதிட்டனர்.

நடுவர் 'பல்லவமன்னன் அப்பர்பெருமானுக்கு வழங்கிய தண்டனைகள் கொடுங்கோன்மையே என்று தீர்ப்பு வழங்கினர். நாள்தோறும் அன்பர் பலர் வந்து வழிபட்டும், சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுற்றனர்.

திருப்பனந்தாளில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீபெரியநாயகியம்மைஉடனுறை ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத் திங்கட் பெருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. 5—4—76 அன்று கொடியேற்றமும், 9—4—76 அன்று இடபவாகனக் காட்சியும் நிகழ்வுற்றன. 11—4—76 அன்று திருக்கல்யாணமும் 13—4—76 அன்று திருத்தேர்த் திருவிழாவும் 14—4—76 அன்று தீர்த்தத் திருநாளும் நிகழும்.

6—4—76 அன்று திரு. சுவர்ணகாளீசுவரன் 7—4—76 அன்று திருமுறைக் கலாநிதி குடந்தை ப. சுந்தரேசனர் 18—4—76 அன்று சிதம்பரம் டாக்டர். திரு. வை. இரத்தினசபாபதி எம். ஏ. பி. எச். டி. 9—4—76 அன்று தருமை ஆதீனப்புலவர் வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியார், 10—4—76 அன்று புலவர் திரு. ந. சண்முகசுந்தர தேசிகர் ஆகியோர் முறையே திருநீலகண்டர், காரைக்காலம்மையார், கண்ணப்பர், மாணிக்கவாசகர் குங்குலியக்கலயர் என்ற தலைப்புக்களில் விரிவுரை யாற்றினர்.

12—4—76 அன்று திருவதிகை திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியார் அவர்களது 'எறிபத்தர்' என்ற பொருள்பற்றிய விரிவுரைக்குப்பின், மன்னார்குடி திரு. என். எஸ். ரெங்கராசன் குழுவினர் இன்னிசையும் நடைபெற்றன. அன்பர் பலர் வந்து வழிபட்டும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

செம்பொன்னார் கோயிலில் திருப்பணித் தொடக்க விழா

திருச்செம்பொன்பள்ளி என்பது தற்போது செம்பொன்னார் கோயில் என வழங்கப்பெறுகிறது. இங்குள்ள பெருமான் பெயர் ஸ்ரீ சுவர்ணபுரீசுவரர். அம்பாள் பெயர் ஸ்ரீ சுகந்தகுந்தளாம்பிகை (மருமலர்க்குழலி) இப்பெருமானை வழிபட்டு அருள் பெற்றோர் பலர். இத்தலத்து இறைவன்மீது சமயாசாரியர்களுள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடிய பதிகங்கள் இரண்டுஉள்ளன.

தற்பொழுது இத்திருக்கோயில் திருப்பணிக்கு ஏற்பாடு செய்யப் பெற்று, 18—3—76 வியாழக்கிழமை அன்று திருப்பணித்தொடக்க விழா நடைபெற்றது. அன்று சுவாமி அம்பாள் முதலிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் கணபதி ஹோமமும் நடைபெற்றன. அன்று மாலை தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி திருப்பணியைத் தொடங்கிவைத்து அருளாசி வழங்கியருளினார்கள். வியாழக் கிழமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மௌனத் தவம் பெருக்கும் நாளாதலின் தமது ஆசியுரையை ஒலிப்பதிவின் மூலம் வழங்கியருளினார்கள். விழாவிற்கு நாகை அறநிலையத்துறைத் துணை ஆணையர் திரு. அர்ச்சுனன் அவர்களும் மற்றும் பல பெருமக்களும் வந்து கலந்து கொண்டனர். திருப்பணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ரூ. 1001—00 நன்கொடை வழங்கியருளினார்கள். திருக்கோயில் நிர்வாகி சிவாசாரியர் அறங்காவலர்களும், உள்ளூர்ப் பெருமக்களும் பூர்ணகும்பம் முதலிய கோயில் மரியாதைகளுடன் நாதசுர இன்னிசை முழங்க ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வரவேற்றார்கள். இத்திருக் கோயில் 1959 இல் திருப்பணிசெய்து மகாகும்பாபிஷேகமும் செய்விக்கப்பெற்றது.

சென்னை தருமையாதீனப் பிரசார நிலையத்தில்
நாயன்மார் குருபூஜை விழாக்கள்

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் காரைக்காலம்மையார், தண்டியடிகள் நாயனார் குருபூஜைகள் முறையே 19—3—76, 28—3—76 ஆகிய நாட்களில் நடைபெற்றது. புலவர் திரு. என். இராசு பெரியபுராணம் படித்து விரிவுரையாற்றினார். அன்பர் பலர் கேட்டுப் பயனுற்றனர்.

திருவாசக விரிவுரை

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் திங்கள், சனி ஆகிய இருநாட்களிலும் மாலை 6-30 மணி முதல் 8-00 மணி வரை புலவர் திரு. என். ஆர். முருகவேள் அவர்களால் திருவாசக விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. 1976 மார்ச்சு மாதத்தில், திருப் புலம்பல், குலாப்பத்து, அற்புதப்பத்து, யாத்திரைப்பத்து என்ற பகுதிகள் நடத்தப் பெற்றன.

பெரியபுராண விரிவுரை

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 10-30 மணி முதல் 12 மணி

வரையில் திரு. எஸ். சிவகுமாரன் அவர்களால் பெரிய புராண விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. 1976 மார்ச்சுமாதத்தில் திருஞானசம்பந்தர் புராணம் தொடர்ந்து விரிவுரையாற்றப்பெற்றது.

கிருத்திகைப் பிரசாதம் வழங்கு விழா

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் 8-3-76 திங்கட்கிழமை மாலை 7-00 மணிக்கு நிலையமன்றத்தில் திரு. P. புலியூர் உடையான், (இணை நேர்முக உதவியாளர் HR & CE (Adm) Dept.) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நிலைய ஓதுவார் திரு. S. ஞானப்பிரகாசமும், திரு. என். இராமமூர்த்தி அவர்களும் வேளூர்ப்பதிகங்களைப் பாராயணம்செய்தனர். தலைவர் தமது உரையில் குறிக்கோளுடன் மனிதன் வாழ்தல்வேண்டும். இறைவனை வணங்கல், திருநீறணிதல், திருவைந்தெழுத்தை ஓதுதல் ஆகியவை சைவர்களுடைய தலையாய கடமை என்னும் கருத்துக்களை விளக்கிப் பேசி, தருமையாதீனம் செய்துவரும் பணிகளைப் பாராட்டிப் பேசினர். அன்பர்கட்குப் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையச் சார்பில் 1976 மார்ச்சுமாத சமயப் பிரசார வழிபாடு திருவேற்காடு ஸ்ரீ பாலாம்பிகை சமேத வேதபுரீசுவரர் ஆலயத்தில் 28—3—76 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. சுவாமி, அம்பாளுக்கு அபிஷேகமும் அர்ச்சனைகளும் செய்யப்பெற்றன. மற்ற மூர்த்திகட்கு அர்ச்சனைகள் செய்யப்பெற்றன. திருமுறைப் பாராயணத்திற்குப் பின்னர் வழிபாட்டு நிறைவில் சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. பக்தர்கள் பலர்கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanatheeswaraswamy Devasthanam, Thiruvaiyaru.

"I am indeed very happy that I could offer worship at this great shrine"

(Sd.) R. V. Subramaniam,
Advisor to the Governor
of Tamil Nadu.

31—3—76

எதிர்காலம்

ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(நள ௵ சித்திரை ௴ 1௳ முதல் 31௳ முடிய)

(13—4—1976 முதல் 13—5—1976 முடிய)

கலியுகம் 5077 ஸ்ரீ நள ௵ சித்திரை ௴ 1௳க்கு கலியுக சுத்த தினம் 1854416ம் நாள் 10 நாழிகை 25 விநாடி இதை 7-ஆல் வகுத்து வந்த மீதமாகிய தினம் சுக்கிராதி வாரக்கிரமத்தில் 5 வதாகிய மங்களவாரம் ஹஸ்த நக்ஷத்திரத்தில் உதயம் முதல் 10 நாழிகை 25 விநாடிக்கு மிதுன லக்னத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரிய பகவான் மீனராசியிலிருந்து மேஷராசி சங்கிரமணமாகி விஷு புண்ணிய காலமாக ஸ்ரீ நள ௵ சௌரமான சித்திரைமாதப் பிரவேசம் செய்தருளுகிறார். சைத்திர சுத்தப் பிரதமையின் வாராதிபதி புதன் இவ்வாண்டிற்கு இராசாவாகவும் சௌரமான வருஷப்பிரவேச வாராதிபதி செவ்வாய் மந்திரியாகவும் திகழ்கிறார்கள். அவர்களின் பலன் ஆண்டு பூராவிலும் நடப்பதாயினும் இம்மாத கிரகநிலையின்படி ஏற்படுகின்ற பலன் உலகில் சர்வஜன சுபிட்சம் ஏற்படும். எங்கும் சிவந்த நிற தானியங்கள் அபிவிருத்தியும், பருத்தி ஜவுளி மற்றும் உபயோக நவீன பொருள்கள் ஏராளமாக உற்பத்தியாகியும் அபரிமிதமாக வெளிவரும். ஆயினும் மக்களின் வாங்கும் சக்தி குறைந்துகாணும். உலக வல்லரசுகளிடையே போர்யத்தனங்கள் தீவிரமாகிக் கொண்டிருக்கும். உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் தவசீலர்கள் ஆற்றுகின்ற புண்ணிய கைங்கரியங்கள், வேத பிராமணர்களால் மிளிர்கின்ற வேதங்கள், தேவாலயங்களில் தெய்வ ஆராதனைகள் சிறப்புற்று உலகில் சுபிட்சம் நிலவும். உலகெங்கும் ஆஸ்திகம் பரவி சகல பிரஜைகளும் சௌகரியமுடன் வாழ்வார்கள்.

சூரிய சந்திர கிரஹணங்கள்

1. சூரிய கிரஹணம் நள ௵ சித்திரை ௴ 17௳ (29-4-76) குருவாரம் அமாவாசை பரணி நக்ஷத்திரத்தில் ஏற்படுகின்ற

கேது கிரஸ்த கிருஷ்ண வர்ண சூரியோபராக புண்ணியகாலம் கௌபேரபர்வா, இது தென்னுட்டில் பார்சுவமாகத் தெரியும். தென்னுட்டில் இது கிரஸ்தாஸ்தமானதால் ஸ்பர்சமும் பரம கிராஸமும் சுமார் பரிமாணமும் ஓரிடத்திற்கு ஓரிடம் மாறுதலாக இருக்கும்,

அதாவது இந்தியன் ஸ்டான்டர்ட் மணிப்படி

	ஸ்பர்சம்	பரமகிராஸம்	பரிமாணம்
	மணி நிமி	மணி நிமி	
சென்னை	4 - 58 P. M.	5 - 57 P. M.	36
தஞ்சாவூர்	5 - 03 ,,	5 - 57 ,,	29
கோயம்புத்தூர்	5 - 02 ,,	5 - 55 ,,	44
மதுரை	5 - 05 ,,	5 - 57 ,,	25
கொழும்பு	5 - 14 ,,	5 - 58 ,,	18

அன்று நாள் முழுதும் போஜனம் கூடாது. அமாவாசை சிரார்த்தம் மறுநாள் செய்யலாம். அசுவதி, பரணி, கார்த்திகை முதல் பாதம், பூரம், பூராட நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் சாந்தி செய்து கொள்க.

2. சந்திரகிரஹணம்:- டி சூரியகிரகணத்திற்கு 15 தினத் திற்குள் அதாவது நளஹூ சித்திரைமீ 31உ (13, 14-5-76) பௌர்ணமி விசாக நக்ஷத்திரத்தில் சம்பவிக்கும் இராகு கிரஸ்த கிருஷ்ண வர்ண பார்சுவ சோமோபராக புண்ணிய காலம், கௌபேரபர்வா எங்கும் இந்திய ஸ்டான்டர்ட் மணிப்படி 14உ ஸ்பர்சம் நடுநிசி மணி 12 - 46 பரம கிராஸம் மணி 1 – 24 A. M. மோக்ஷம் மணி 2 – 3 A M. பிரமாணம் 13 அல்லது அரைக்கால் சந்திரபிம்ப உத்திர துருவாபிமுக நேமியிலிருந்து ஸ்பர்சம் கிழக்கே 168 பாகையிலும், மோக்ஷம் மேற்கே 150 பாகையிலும் ஏற்படும்.

பகல் மூன்று ஜாமத்திற்குமேல் போஜனம் கூடாது. பௌர்ணமி சிரார்த்தம் செய்யலாம். சித்திரை பின் ½, சுவாதி விசாகம் ¾, புனர்பூசம், பூரட்டாதி நக்ஷத்திரங்களில் பிறந்தவர் சாந்தி செய்து கொள்க.

இந்த இரண்டு கிரஹணங்களின் பலனுவது, கௌபேரபர்வா ஆனதால் அரசர்களுக்குள் யுத்த பிரகடனங்கள் தீவிரமாகும். தனவந்தர்களுக்கு மித பலனும், பிரஜைகளுக்கு சுபிட்சமும் ஏற்படும்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

(சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ.)

மேஷராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். தனசௌகரியம் திருப்திகரமாக இருந்துவரும். நிறுத்தமுடியாத சம்பிரதாய சுபச்செலவுகள் ஏற்படும். சகோதரருக்கு சந்ததி ஏற்படும். உடலில் வெப்பாதிக்க நரம்பு உபத்திரவம் காட்டி நீங்கும். இயந்திர சாதனங்களில் நற்பலனைத்தரும். தெய்வானுக்கிரஹத்தினால் சகல காரியங்களும் சித்தியாகும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் வல்லமையளிக்கும். செவ்வாய் புதன் சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½

(இ. ஊ. ஏ. – ஓ. வ. வி. வு. – வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பத்தில்வரவும்செலவும் சரிசமனாக இருந்துவரும். சகோதர நலம் சாதாரணமாக இருந்து வரும். வீடு பூமி சம்பந்தமாக குழப்ப நிலைமை ஏற்படினும் தெய்வானுக்கிரகத்தினால் அந்நிலைமை நீங்குவதாகி எல்லா நிர்பந்தங்களையும் சமாளிக்கும் ஆற்றல் ஏற்படும். களத்திரம் புத்திரர்களின் மேன்மை ஸ்திதிக்கு வழிவகைகள் ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் சிறப்பு தரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம்– மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

(கா. கி. – கு. க. ங. ச்சா. – கே, கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் இம்மாதம் சுபபலனாக நடக்கும். தனம் மேன்மேலும் விருத்திகரமாக இருந்துவரும். தன் வாக்கு பிறருக்கு அருவருப்பாக இருப்பினும் நேர்மையை வற்புறுத்துவதாக இருக்கும். சகோதரர்களுக்கு உயர்வுதரும். பந்து அம்மான்களின் அனுசரணையும், மனைவி புத்திரர்களால் மகிழ்ச்சியும் நிலவும். உடலில் இரத்தக்காயம் படும். ஆயினும் ஆபத்து நேராது. செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் மேலிடங்களில் நன்மதிப்பு கொடுக்கும். சனி ஞாயிறு சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

(ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலனாக நடக்கும் பண வசதியும், ஸ்வர்ணம் வெள்ளி இவற்றின் ஆதாயமும் கொடுக்கும். குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடைபெறும். சகோதரர் பந்து அம்மான்கள் விசுவாசமாக இருப்பார்கள்.

வாகனச்சேர்க்கை, பால்பிராப்தி ஏற்படும். புத்திரர்களுக்கு மேன்மை ஸ்திதி உண்டாகும். இம்மாதம் 16உக்கு மேல் தூரப் பயணம் ஒன்று நேரும். செய்தொழில் அல்லது உத்தியோகம் செவ்வனே நடந்து அவ்வப்போது அலுவல்கள் பூர்த்தி யடையும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

(ம. மி. மு. மெ. – மோ. ட. டி. டு. – டே.)

சிம்மராசி 9 பாதங்களும் இம்மாதம் சுமார் பலனை நடக்கும்; குடும்பமேன்மையும், புத்திசாதுர்யத்தினால் தன சேர்க்கையும் ஏற்படும். சகோதரர்களுக்கு சௌக்கியமும் மேன்மையுமேற்படும். உதாரகுணமும் பெரியோர் நேசமும் சிறப்பைத் தரும் வாகன பிராப்தி, பால்பிராப்தி உண்டாகும். புத்திரர் புத்திரிகளுக்கு சுபங்கள் நடக்கும். கணவன் மனைவியின் உறவில் சந்துஷ்டி இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் அனுகூலங்கள் ஏற்படும். புதன் வியாழன் சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

(டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனை நடக்கும். குடும்பாபிவிருத்தியில் சிரமம் தோன்றினும் தக்கசமயத்தில் பொருள் வரவும், மேலோர் பெரியோர்களினால் அனுகூலங்களும் ஏற்படச்செய்யும், சகோதரர்களின் தொழில் துறை சிறக்கும். இம்மாத பிற்பகுதியில்மனைபிராப்தியும், புத்திரர்களுக்கு உயர்வும் ஏற்படும். சத்துருக்களின் தொல்லைகள் நீங்கி நிம்மதியாகும். பூர்வ சொத்தில் ஓர் வரவும் உத்தியோகத்தில் சிறப்பும் ஆதாயங்களும் ஏற்படும். வெள்ளி சனி சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

(ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிரபலனை நடக்கும் குடும்பத்தில் வரவு செலவு சரிசமமாக இருந்து கொண்டிருக்கும் சகோதரர் புத்திரர் புத்திரிகளின் நலன் திருப்திகரமாக இருந்து கொண்டிருக்கும். பூர்வப்பொருளில் ஓர் சிக்கலும் பரிவர்த்தனையும் நேரும். பிதாவுக்கு உடல் நல பாதிப்பு ஏற்பட்டு, குணமாகும். சகல விஷயங்களிலும் மதிப்பு குறைவின்றி இருந்து வரும். செய்தொழில் அல்லது உத்தியோகம் சாதாரணமாக நடைபெறும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.
(தோ. - ந. நி. நு. நெ. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் இம்மாதம் நற்பலனைத்தரும். பணவசதி திருப்திகரமாக இருந்து வரும், சகோதரர்களுக்கு நலன்கள் ஏற்படும். பந்து அம்மான்களினால் அனுகூலங்கள் ஏற்படும். மாதா பிதா சௌக்கியமடைவார்கள். புத்திரர்களுக்கு தொழில் துறைகளில் ஆதாயங்களும் சௌக்கியமும் ஏற்படும். இம்மாதம் புத்திரப்பிராப்தி ஒன்று ஏற்படும். வியாஜ்ஜிய வழக்கு களில் ஜெயம் ஏற்படும். கணவன் மனைவியின் விசுவாசம் மேலிடும். செய்தொழில் அல்லது உத்தியோகம் வெற்றிகரமாக செயல்படும். சனி ஞாயிறு சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼
(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் இம்மாதம் சுமார் பலனை நடக்கும். பணவசதி திருப்திகரமாக இருந்துவரும், குடும்பாபி விருத்தியும், சகோதரருக்கு முன்னேற்றமும் ஏற்படும். பசு பால் பிராப்தியில் குறைவின்றி இருந்துவரும். மனைவிக்கு கர்ப்பத்தில் நலிவும் புத்திரர்களின் போக்கில் அதிருப்தியும் காணும். தெய்வ பிரார்த்தனையால் சகல தாபங்களும் நீங்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் விருப்பு வெறுப்பு கலந்து மந்தமாக செயல்படும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

10. மகரம் - உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½
(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் இம்மாதம் சுபபலனை நடக்கும். குடும்பத்தில் போதிய பணவசதி புத்திசாதுரியத்தினால் ஏற்படும். முன்பு செய்த பரோபகாரங்களினால் எதிர்பாராத சிலநன்மைகள் ஏற்படும். சகோதரர்களுக்கு சிரமங்கள் விலகி, சௌக்கியம் ஏற்படும். வித்தியா வியாபார சித்தியும் புத்திரர்களால் மகிழ்ச்சி யும் ஏற்படும். வியாஜ்ஜிய வழக்கில் ஜெயம் ஏற்படும். செய் தொழில் அல்லது உத்தியோகம் புகழாக இருந்துவரும். புதன் வியாழன் சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾
(கு. கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. த.)

கும்பராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். குடும்பத்தில் சுபிட்சமும் பண வசதி தாராளமாகவும் இருந்து

வரும். சகோதரர் புத்திரர்களால் மனக் குழப்பங்கள் நேர்ந்து தெய்வானுக்கிரகத்தினுல் தெளிதலாகும். மாதா பிதாக்களுக்கு சௌக்கியபலன் இருந்துவரும். பெண்கள் வகை சுகவிருத்தியும் பூர்வசொத்தில் ஓர் ஆதாயமும் ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் இம்மாதப் பிற்பகுதியில் தைரியத்தையும் காரிய ஜெயங்களையும் அளிக்கும். வெள்ளி சனி சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.

(தி. து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி.)

மீனராசி 9பாதங்களும் இம்மாதம் சுமார்பலனுகநடைபெறும். குடும்பத்தில் போதிய பணவசதிகள் ஏற்படும். வாக்குகௌரவம் மேலாக இருந்துவரும். வெண்மையானவஸ்து பிராப்தியை அளிக்கும். சகோதரர் சகோதரிகளுக்கு சௌக்கியம் தரும். காரபுத்திரர் சம்பந்தமாக மன ஆயாசம் காட்டி நீக்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் நெருக்கடி பிரச்சினைகள் ஏற்படும். ஆயினும் தெய்வானுக்கிரகத்தினுல் உபாயவழி ஏற்படுவதும் சமாளித்தலும் ஆகும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய நலம் தரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

மாத ஜன்மநட்சத்திர வழிபாடு

தருமை யாதீனம் 26-வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது மாதாந்தர ஜன்மநட்சத்திர நாள் வழிபாடு பாடல் பெற்ற தலங்களில் - காவிரியின் வடகரைத் தலங்களில் மாதந் தோறும் நடைபெற்று வருவதை அனைவரும் அறிவர். பங்குனி மாத வழிபாடு 13–3–76 சனிக்கிழமையன்று திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ பிரம்மபுரீசுவரர், ஸ்ரீ திருநிலை நாயகியம்மை, திருஞானசம்பந்தர், விநாயகர் சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளுக்கு அருச்சனைகளும் நடைபெற்றன வழிபாட்டின்போது அவ்வத்தலத் திருப்பதிகப் பாராயணமும், பதிக விளக்க விரிவுரையும் நிகழ்த்தப்பெற்றன. சீகாழித் திருப்பதிகங்கள் என்ற நூல் வெளியிட்டு வழங்கப்பெற்றது. ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்கள், கண்காணிப்பாளர்கள் ஆகியோர் சென்று வழிபாட்டை உடனிருந்துநிகழ்த்தினர்கள். வழிபாட்டில் உள்ளூர் அன்பர்கள் பங்குகொண்டு பயன்பெற்றனர்.